Registered as a Newspaper
பக்கங்கள் 8
விலை ரூபா 6·00

## மலேரியா நோயின் தாக்கம் யாழ் குடாநாட்டில் திடீர் அதிகரிப்பு

யாழ் குடாநாட்டில் மலேரியா நோயின் தாக்கம் வெகுவாக நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக யாழ் போதனா வைத்திய சாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. கடந்த சில வாரங்களாக யாழ் குடாநாட்டில் பெய்துவரும் மழையினால் மலேரியா நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் இவற்றை கட்டுப்படுத்துவதற்கு பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கத்தினரிடம் மலத்தியோன் மருந்தும் கைவசம் இல்லாது இருப்பதாகவும் தெரியவருகிறது. (8ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 11 | 28-10-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 252

# புலிகள் சமாதானத்தை விரும்புவதாக நமது அரசாங்கம் இன்னமும் நம்புகிறது

## எவர் மீதான குற்றங்களையும் அரசு மறைக்க முயலவில்லை என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குற்றங்களை நாம் மூடிமறைத்துவெள்ளை சாயம் பூச முற்படவில்லை. ஆனால், விசாரணை முடியும்வரை எவர்மீதும் பொறுப்புள்ள கட்சி என்றவகையில் குற்றம் சுமத்த நாம் விருபபவில்லை. இதே சமயம், விடுதலைப் புலிகள் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகின்றனர் என இன்னமும் நாம நம்புகிறோம். இவ்வாறு சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் குற்றங்களை மூடிமறைத்து அவர்களுக்கு வெள்ளைச்சாயம் பூச நான் முற்படவில்லை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக முயற்சிகள் தொடரப்படும் அதே வேளை குண்டுவெடிப்பின்சம் பந்தப்பட்டோரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் நாம் திறந்த மனதுடனேயே கடமையாற்றுகிறோம் என மேலும் அவர் தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில் தமிழ் மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை தடையின்றிக் கிடைக்கச்செய்தல், நெடுஞ்சாலை வசதி, மின்சாரம் முதலிய தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான எமது செயற்பாடு ( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் 7 பேர் பலி

(கொழும்பு)

கொழும்பில் கடந்த திங்கள் அதிகாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த ஏழு பேர் கொல்லப்பட்டதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

## கூரேக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

எனது பாதுகாப்பை அதிகரிக்குமபடி நான் அரசாங்கத்தை கோரவில்லை. ஆனாலும் எனது பாதுகாட்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. என (8 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகள் இன்றி தீர்வு என்பது முட்டாள்தனமான பேச்சு

விடுதலைப்புலிகள் இன்றிநாட்டில் நடந்து கொண்டிருக்கும் 11 ஆண்டு கால உள்நாட்டுப் போருக்கு தீர்வு காண முடியும் என நினைப்பது முட்டாள் தனம் என பிரதமர் கூறினார், ஆனால் இப்போது இறங்குவது பிரச்சினையை வாங்குவது போல் இருக்கும் என பிரதமர் சந்திரிகா நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நிலைமை உணர்ச்சி பொங்கிய நிலைமையாக இருப்பனால் மோசமாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திசாநாயக்காவைக்கொல்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்ததாகவு என் பி; ஆதரவாளர்கள் நடெங்

## விடுதிகள் சுற்றிவளைப்பு 25தமிழர்கள் கைது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருந்த காமினி திசாநாயக்கா குண்டுவெடிப்பில் பலியாகிய களின் போது ஐந்து பெண்கள் உட்பட 25பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் கொட்டாஞ்சேனையிலுள்ள விடுதியொ

நம்புகிறோம். இவ்வாறு சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் குற்றங்களை மூடிமறைத்து அவர்களுக்கு வெள்ளைச்சாயம் பூச நான் முற்பட வில்லை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக முயற்சிகள் தொடரப்படும் அதே வேளை குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டோரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் நாம் திறந்த மனதுடனேயே கடமையாற்றுகிறோம் என மேலும் அவர் தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில் தமிழ் மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை தடையின்றிக் கிடைக்கச்செய்தல், நெடுஞ்சாலை வசதி, மின்சாரம் முதலிய தேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான எமது செயற்பாடு

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## குமாரக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

எனது பாதுகாப்பை அதிகரிக்குமபடி நான் அரசாங்கத்தை கோரவில்லை. ஆனாலும் எனது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. என

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் இன்றி தீர்வு என்பது முட்டாள்தனமான பேச்சு

விடுதலைப்புலிகள் இன்றி நாட்டில் நடந்து கொண்டிருக்கும் 11 ஆண்டு கால உள்நாட்டுப் போருக்கு தீர்வு காண முடியும் என நினைப்பது முட்டாள் தனம் என பிரதமர் கூறினார், ஆனால் இப்போது புலிகளுடன் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகளில் இறங்குவது பிரச்சினையை வாங்குவது போல் இருக்கும் என பிரதமர் சந்திரிகா நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நிலைமை உணர்ச்சி பொங்கிய நிலைமையாக இருப்பதாகவும் இது ஐதேக கட்சி ஆதரவாளர்களின் செயல்களினால் மோசமாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திசாநாயக்காவைக்கொல்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்ததாகவு என்பி; ஆதரவாளர்கள் நாடெங்கும் கையெழுத்து சுவரொட்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# விடுதிகள் சுற்றிவளைப்பு 25தமிழர்கள் கைது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருந்த காமினி திசாநாயக்கா குண்டுவெடிப்பில் பலியாகியதைத் தொடர்ந்து கொழும்பு நகரிலுள்ள விடுதிகள், தங்குமிடங்களை பொலிசார் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினர்

இச்சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது ஐந்து பெண்கள் உட்பட 25பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் கொட்டாஞ்சேனையிலுள்ள விடுதியொன்றிலிருந்து இருவர் கைது செய்யப்பட்டனர்

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்க

(8 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த திங்களன்று குண்டு வெடிப்பு நிகழ்ந்தபோது காமினி திசாநாயக்காவின் கூட்டம் நடந்த மேடையையும் அம் மேடைக்கு முன்னால் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சிலரின் சடலங்கள் கிடப்பதையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

# சமாதான முயற்சிகள் தோற்றால் ராணுவ தீர்விற்கு அனுமதி அளிப்போம்

## அமைச்சர் அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கை என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இயன்றளவு விரைவாக அவை மீண்டும் ஆரம்பிக்கப்படும். தற்போதைய நிகழ்வுகள் பலவற்றை மேற்கோள் காட்டி ரூபவாஹினியைச் சேர்ந்த தயாமகேந்தகுணதிலக்க வினவியபோது.

பேச்சுவார்த்தைகள்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தற்கொலைப் படையாளியின் சிதைந்த தலைப்பகுதி பொருத்தப்பட்டுள்ளதாம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவைக் கொலை செய்வதற்கு சூத்திரதாரியாக செயற்பட்ட தற்கொலைப்படையாளி என கருதப்படும் பெண் ஒருவரின் தலையென பொலிசார் நம்பும் ஓர் தலையின் சிதைந்த பகுதிகளை அரச மருத்துவ அதிகாரிகள் இப்பொழுது பொருத்தியுள்ளனர்.

முகத்திலும்மற்றும் வாயைச் சுற்றியுள்ள பகுதியிலும் மண்டை ஓட்டின் பகுதிகளிலும் கடுமையாக சிதைந்திருந்தாலும் பொருத்தப்பட்ட முகம் நன்றாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## சமாதான செயலணி கோரிக்கை

சமாதானத்தை விரும்பும் குடிமக்களையும் அமைப்புகளையும் உள்ளடக்கிய சமாதான செயலணி சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இலங்கையின் அவசரமான முன்னுரிமை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வழங்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும என்றும் அது கேட்டுள்ளது.

அண்மையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உருவான வாய்ப்புகளைத் தவறவிடக் கூடாது என்றும் சமாதானத்தைவிரும்பும் மக்களின் பேரவா மதிக்கப்படல் வேண்டும் என்றும இந்தச் செயலணி கேட்டுள்ளது.

இந்தவேளையில் சமாதான நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற தடங்கல்கள் நாட்டு மக்களை மீண்டும் முட்டுக்கட்டை நிலைக்கு இட்டுச் செல்லும் என்றும் யுத்தத்தில் மாற்ற முடியாத தத்துவங்களுக்கும், அழிவுகளுக்கும், சீர்கேடுகளுக்கும் அது காரணமாக அமைந்து விடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதாரங்கள் வெளியிடப்படும்

காமினி திசாநாயக்காவின் கொலைதொடர்பாக கிடைத்துள்ள ஆதாரங்கள் விரைவில் வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும விசாரணைகள் முடிவடைந்த பின்பே உத்தியோகபூர்வமாக அரசு தகவல்களை வெளியிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# புலிகள் சிறியரக நீர்மூழ்கிகள் மூலம் கடற்படை முகாம்களை தாக்கலாம்

(கொழும்பு)

பிரதான கடற்படை, விமானப்படைத் தளங்களை புலிகள் தாக்கத் திட்டமிட்டு வருவதாக பாதுகாப்பு புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே லீடர் தெரிவித்துள்ளது,

புலிகளின் கடற்புலிகள் பகுதியினர், சிறியரக நீர்மூழ்கிப் படகுகளைக் கொண்டு கடற்படைத் தளங்களையும் யுத்தக் கப்பல்களையும் தாக்க திட்டமிடுவதாகவும், இவ்வாறான தாக்குதலுக்கு பயன்

( 8 ஆம் பக்கம் பார்க்க )



கடந்த திங்களன்று நடைபெற்ற கொழும்பு குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்ட சிலரின சடலங்கள் சிதறுண்டு கிடப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

## வரி விளம்பரம்

**பாலர் ஆசிரியராகலாம்**

கடைசித் தலைமை க.பொ. த (சா/த) சனி ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் விரைவில் பதிக: பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6175)

**பால் விற்பனைக்கு**

திருநெல்வேலி யாழ்ப்பாணம், சச்சேரி, கொழும்புத்துறை, நல்லூர், கோப்பாய், கோண்டாவில், தாவடி, கொக்குவில் ஆகியஇடங்கட்கு உட்பட்ட பகுதிகட்கு வீட்டுக்கு நேரடியாக பால் விநியோகிக்கப்படும், தொடர்பு;- பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய் (சி-10582)

**தவறிவிட்டது**

15-10-94 அன்று ஐயாத்துரை அன்னபூரணம் என்பவருடைய அடையாள அட்டையும் (இல 475351673V) கொங்கொங் வங்கி புத்தகமும் (இல 00V381391-020) ஆலங்கேணியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (9827)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 . 10. 28**
**வெள்ளி இரவு**

08.01 - கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் நூல அறிமுகம் அறிமுகமாவது ''சுரபி'' சஞ்சிகை அதனையடுத்து சிறுகதை - தமிழ்க்கவி எழுதிய ''சரித்திரம் காத்திருக்கின்றது'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- கவிதா எழுதிய ''போர்ப்பரணி பாடிவரும் பொன்மறவர் நினைவுகள்''

08.25 -கணப்பொழுது- சி.கண்ணம்மா எழுதிய ''கப்டன் டோறா''

08.30 - செய்திகள்

08,40 - அரசியல் அரங்கம் வே, பாலகுமாரன் எழுதிய ''பிரியும் விளிம்பில் இன்னொருதேசம்''

08,50 - மீனவர் விடுவிப்புநிகழ்வுகளின்தொகுப்பு தொகுத்து வழங்குபவர் சத்யா

**1994 . 10 . 29**
**சனி காலை**

07.02-மாவீர வணக்கம்

07.15 - நீங்கள் கேட்டவை

07.30 - செய்திகள்

07,35-பத்திரிகைச் செய்திகள்

07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# சிறிமா திசாநாயக்காவின் தெரிவு ஏகமனதானது

## ஐ. தே. க. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

திருமதி சிறிமா திசாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக தேசிய செயற் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பி- பீ- ஸியின் தென்னாசிய சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்முரண்பாடுகள் காணப்பட்டிருப்பினும் அது காமினியின் மறைவுக்குப் பின்னர் மறைந்துவிட்டது என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் திருமதி சிறிமாவைவிட தகுதியும், திறமையும் உடையவர் இருக்கின்ற போதும் தற்போது பொருத்தமான தகுதியான வேட்பாளராகவே அவரைக் கட்சி கருதியது அவர்மீது கட்சி நிறைய நம்பிக்கை வைத்துள்ளது என மேலும் அவர் கூறினார்-

# 3 உயர் அதிகாரிகளுக்கு மாகாணசபையில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் மூவர் மாகாணசபையில் நியமிக்கப்படவுள்ளனர் இலங்கை திட்டமிடல் சேவை கணக்கா

உள்ள எல்லா தர அலுவலர்களும் மற்றைய மாவட்டங்களுக்கும் திருக்கோணமலைக்கும்மாற்றப்படவுள்ளதாகவும் இங்கு வருகை தந்த மாகாண சபை அதிகாரிகளினால் தெரி


மலிவு விற்பனை!

# திருமாட்டி

(சீமாட்டி)

## புடைவைக்கடல்

## மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை!

ஓர் அரிய வாய்ப்பு!

எமது இனிய வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இன்றும் என்றும் இல்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்!!

மங்களகரமான தீபாவளித் தினத்தை முன்னிட்டு அனைத்து ஜவுளித்தினிசுகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன ! ! !

உங்கள் தேர்வுக்கு இன்றே முந்துங்கள்!

தலைநகரில் சுபமுகூர்த்தப் புடைவைகளுக்குக் கைராசியான ஒரே ஸ்தாபனம்

# திருமாட்டி

(சீமாட்டி)

**புடைவைக்கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(சி-10544)



## தமிழ் பிரதேசத்தில்

வர்ணப்பட பிரதியாக்கல் இயந்திரங்கள்/ தொழில் நுட்பம்

COLOUR PHOTO FINISHING MACHINARIES/TECHNOLOGY

# "ஓர் அறிமுகம்"

## ஸ்ருடியோ மற்றும் இத்துறை சார்ந்தோர்க்கான சிறப்புச் செய்தி

**நீங்களும் வர்ணப்பிரதியாக்கம் செய்ய முடியும்!!!**

★ நீங்கள் விரும்பும் முதலுக்கு ஏற்ற இயந்திரங்கள்/தொழில் நுட்பம்

(ரூபா 90,000.00 ---- ரூபா 120 லட்சம் வரை)

★ ஆரம்பம் முதல் நிறைவு வரை ஆலோசனை வழங்கவும், தேவை ஏற்படின் ஆய்வு கூடத்தை நிறுவித்தரவும், தொழில் நுட்பப் பிரச்சினை உருவாகும் போதெல்லாம் அவற்றை ஆராய்ந்து தீர்த்து வைக்கவும் ஆயத்தமாய் உள்ளோம்.

★ உங்கள் வெற்றிக்கு NORITSU, FUJI, KONICA, KODAK, DUSST போன்ற முன்னணி நிறுவனங்களினுடனான எமது நெருங்கிய தொடர்பு உறுதியளிக்கின்றது என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

★ நீங்கள் தெரிவு செய்து அனுப்பும் ஊழியர்களுக்கு விரைவுப் பயிற்சியை இலவசமாக வழங்கி தொடர்ந்து 6 மாத காலம் பயிற்சியை உங்கள் ஆய்வு கூடத்திலும் வழங்குகின்றோம்,

★ உங்கள் சுயமான வளர்ச்சி இம் மண்ணின் வளர்ச்சி

**உங்கள் தெரிவுக்கு விடைகாண நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்**

**இத்துறையின் வளர்ச்சிக்கு உரமிட்டிடுவோம்**

யாழ். நகரில் 'சுவந்தி' புகைப்பட சேவை

வவுனியா நகரில் 'சுவந்தி'


# கச்சதீவை

ளையும் மோதவிட்டு அரசியல் லாபம் தேடவும் முயற்சிக்கலாம் எனவேகச்சதீவு விடயத்தில் எமது தமிழ் மக்கள் விழிப்புடன்இருக்கவேண்டியதுஅவசியமாகிறது

1974 இலும் 1976 இலும் இலங்கை -இந்திய பாரம்பரிய நீர்ப்பரப்பிற்கிடையிலானகடல்எல்லைகள் வகுக்கப்பட்டபோது இலங்கை முன்பு பயன்படுத்தி வந்த வோட்ஜ் மீன்பிடிமேடையை முற்றாகஇழந்தது அத்துடன் வடபகுதியிலுள்ள பேதுறு மேடையின் 2/3 பகுதியையும் இந்தியாவிடம் இழக்க நேரிட்டது வடபகுதிக்கான கடல்பிராந்தியம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளஇந்நிலையில் கச்சதீவுப்பகுதியையும்இந்தியாவுக்கு விட்டுக்கொடுப்பது என்பது தற்கொலைக்குஒப்பான செயலாகும்.

ஆரம்ப காலங்களில் தொழில் அலகுகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததுடன் மீன்பிடி முறையிலும், தொழில் நுட்பத்திலும் பாரம்பரிய முறைகளே அதிகமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. இதனால் மிகக்குறைவான எண்ணிக்கையினரே இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் இன்று மீன்பிடித்தொழில் அலகுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் நவீன மீன்பிடி முறைகளும், புதிய தொழில் நுட்பமும் அறிமுகப்படுத்தப்பட்டமையால் இத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் இரு நாட்டிலும் அதிகரித்துள்ளது. இதனால் இக்குறுகிய கச்சதீவு சார்ந்த பாக்குநீரிணைப் பகுதியில் வளம் மிக விரைவாகவும், மிகையாகவும் சுரண்டப்படும் ஆபத்து தோன்றியுள்ளது. அத்துடன் தத்தமது எல்லைகளை விட்டு எல்லைகளை மீறிச்செல்வது என்பது பெரும் சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது. 1974 ஒப்பந்தத்தில் உள்ள 5வது 6வது சரத்துக்களில் கூறப்பட்ட கருத்துக்களை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு தேவை இன்று எழுந்துள்ளது பாரம்பரிய உரிமைகளைத்தொடர்ந்து அனுபவிக்க விடுவது இரு நாட்டு மீனவர்களிடையேயும் கசப்புணர்வுகளை வளர்க்கவே வழி செய்யும்.

பாரம்பரிய உரிமைகளைத் தொடர்ந்துஅனுபவிக்க ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளமையானது இலங்கையின் கடல் எல்லைப்பகுதிக்குள் இந்திய மீனவர்களால் மிகக்கூடுதலான கடல் வளங்கள் சுரண்டிச்செல்லப்படுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. வடபகுதி அரசியல் நெருக்கடிகள் தீர்ந்து, கடல் பாதுகாப்பு வலயச்சட்டம் நீக்கப்படுமிடத்து வடபகுதி தமிழ் மீனவர்களும் இந்திய மீனவர்களும் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட சந்தர்ப்பங்கள் உண்டு. இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு நாடும் தத்தமது எல்லைப்பகுதியினுள்ளேயே மீன்பிடியில் ஈடுபட ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் கச்சதீவில் தரை நடவடிக்கைகளாக ஓய்வெடுத்தல் வலைகளை உலரவிடல் கருவாடிடல் மற்றும் சமய விழாக்களில் பங்கு பற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் அனுமதி வழங்கலாம்

இந்திய அரசு இலங்கையின் வடபகுதி வாழ் மீனவர்களின் நன்மைகள் எதனையும் கவனத்திற் கொள்ளாது கச்சதீவுப் பகுதியினை மீளப்பெறுவதிலேயே குறிப்பாக இருக்கிறது தமிழீழப் பகுதியிலிருந்து எவ்வித எதிர்ப்பும் இதுவரையில் வெளியிடப்படவில்லை கச்சதீவு விவகாரத்தில் தொடர்ந்தும் நாம் அசட்டையாக இருப்போமானால் கச்சதீவு என்னும் சிறிய மீனை இந்தியா என்ற திமிங்கலம் மிக விரைவில் விழுங்கிவிடுவதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது

...வராக தேசிய செயற் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பி-பி-லியின் தென்னாபிய சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்முரண்பாடுகள் காணப் மறைந்துவிட்டது என்றார்:

ஐக்கிய தேசியக் கட்சியில் திருமதி சிறிமாவைவிட தகுதியும், திறமையும் உடையவர் இருக்கின்ற போதும் தற்போது பொருத்தமான தகுதியான வேட்பாளராகவே அவரைக் கட்சி கருதியது அவர்மீது கட்சி நிறைய நம்பிக்கை வைத்துள்ளது என மேலும் அவர் கூறினார்-

# 3 உயர் அதிகாரிகளுக்கு மாகாணசபையில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் மூவர் மாகாணசபையில் நியமிக்கப்படவுள்ளனர் இலங்கை திட்டமிடல் சேவை கணக்காளர் சேவை, இலங்கைநிர்வாக சேவைஆகியவற்றைச் சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபையில் பொறுப்பான பதவிகள் வழங்கப்படவுள்ளன என நிதி திட்டமிடல் அமைச்சு திறைசேரி பொதுநிர்வாக அமைச்சு வட்டாரங்களிலிருந்து நேற்று கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை அடுத்து மாகாணசபை பிரதம செயலாளரினால் அனுப்பி வைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் மாகாணசபையினால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலதிகமாக உள்ள எல்லா தர அலுவலர்களும் மற்றைய மாவட்டங்களுக்கும் திருக்கோணமலைக்கும்மாற்றப்படவுள்ளதாகவும் இங்கு வருகை தந்த மாகாண சபை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது (தி), (பா)

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான பாடசாலைகளில் நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு நாளை சனிக்கிழமை காலை 8-30 மணி முதல் யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் 02 ஐச் சேர்ந்த சகல நடன ஆசிரியர்களையும் தவறாது சமுகந்தரும்படி கேட்கப்படுகின்றனர்.

## நாடகவிழா இடமாற்றம்

எதிர்வரும் 30-10-94 ஞாயிறு வாரம் யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி வளர்ச்சிக்காக யா/ மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடாத்தப் படவிருந்த நாடகநிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் அதே தினத்தில் யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இரு தடவைகள் இடம்பெறும்;

பி.ப. 2.00 மணி - பி.ப. 6.00 மணி

அதிபர்

[9831] இளவாலை கன்னியர் மடம் ம. வி.

## காணவில்லை

புன்னாலைக் கட்டுவன் வடக்கு தற்போது ஈவினையில் வசித்து வந்த நல்லையா இராசநாயகம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் 27-10-94 காலை 6.00 மணியிலிருந்து காணவில்லை. வயது 65, நிறச்சாரம் அணிந்திருந்தார். கண்டவர்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் அறியத்தரவும்;

இ. ரகுகரன் (மகன்)
91/8, இந்து மகளிர் ஒழுங்கை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்;

(9834)


★ ஆரம்பம் முதல் நிறைவு வரை ஆலோசனை வழங்கவும், தேவை ஏற்படின் ஆய்வு கூடத்தை நிறுவித்தரவும், தொழில் நுட்பப் பிரச்சினை உருவாகும் போதெல்லாம் அவற்றை ஆராய்ந்து தீர்த்து வைக்கவும் ஆயத்தமாய் உள்ளோம்.

★ உங்கள் வெற்றிக்கு NORITSU, FUJI, KONICA, KODAK, DUSST போன்ற முன்னணி நிறுவனங்களினுடனான எமது நெருங்கிய தொடர்பு உறுதியளிக்கின்றது என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

★ நீங்கள் தெரிவு செய்து அனுப்பும் ஊழியர்களுக்கு விரைவுப் பயிற்சியை இலவசமாக வழங்கி தொடர்ந்து 6 மாத காலம் பயிற்சியை உங்கள் ஆய்வு கூடத்திலும் வழங்குகின்றோம்,

★ உங்கள் சுயமான வளர்ச்சி இம் மண்ணின் வளர்ச்சி

**உங்கள் தெரிவுக்கு விடைகாண நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளுங்கள்**

**இத்துறையின் வளர்ச்சிக்கு உரமிட்டிடுவோம்**

யாழ். நகரில்
'கலக்கி' புகைப்பட சேவை,
3371/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வவுனியா நகரில்
'கலச்சி'
இல. 64, 1-ம் மாடி
பஸ் நிலையம்,
T.P. 024/2467 வவுனியா.

(9826)



மலரும் தீபாவளியில் பெருவாழ்வு பெற்று செழிப்புடனே
இனிது வாழ எம் இதயம் கனிந்த

**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

அன்றும் இன்றும் என்றும் உங்கள் சேவையில்

# லலிதா பட்டுச்சோலை

சிறந்த ரகம்! நிதான விலை!

மங்கள வைபவங்களுக்கேற்ற
கூறைத்தினிசுகள், காஞ்சிபுரம்
பெனாரஸ், மைசூர் சில்க்ஸ்
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
சேட்டிங், சூட்டிங்
கண்ணைக் கவரும் றெடிமேட்
ஸ்கேட் & பிளவுஸ்
மாட்டின் சேட், கசின் (Gazine) சேட்
பட்டுவேட்டி, சால்வைகள்

இவை யாவும்
எல்லா காலங்களுக்கும் ஏற்ற அற்புதத் தெரிவுகள்

**இன்றே விரைந்திடுங்கள்**

# லலிதா பட்டுச்சோலை

5,6, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்.

(சி-10591)


...மனப்படியில் ஈடுபட ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் கச்சதீவில் தரை நடவடிக்கைகளாக ஓய்வெடுத்தல் வலைகளை உலரவிடல் கருவாடிடல் மற்றும் சமய விழாக்களில் பங்கு பற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் அனுமதி வழங்கலாம்

இந்திய அரசு இலங்கையின் வடபகுதி வாழ் மீனவர்களின் நன்மைகள் எதனையும் கவனத்திற் கொள்ளாது கச்சதீவுப் பகுதியினை மீளப்பெறுவதிலேயே குறிப்பாக இருக்கிறது தமிழீழப் பகுதியிலிருந்து எவ்வித எதிர்ப்பும் இதுவரையில் வெளியிடப்படவில்லை கச்சதீவு விவகாரத்தில் தொடர்ந்தும் நாம் அசட்டையாக இருப்போமானால் கச்சதீவு என்னும் சிறிய மீனை இந்தியா என்ற திமிங்கலம் மிக விரைவில் விழுங்கிவிடுவதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது

2

## நினைவு கூருகின்றோம்...

**28. 10. 1994**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் நாவற்குழிப் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சர்வா** (கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம் - புளியம் பொக்கணை - கிளிநொச்சி)

கொந்தக்காரன்குளம் பகுதியில் தேசவிரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சிவகுமார்** (கதிரவேற்பிள்ளை விஜயரத்தினம் - கொந்தக்காரன்குளம் - வவுனியா)

1990-ஆம் ஆண்டு மட்டு-வந்தாறுமூலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சங்கர்** (செல்வரெட்ணம் யசோசிலன் - அம்பாறை)

**மேஜர் கண்ணன்** (செல்லையா உதயநாதன் - கொம்மாந்துறை - மட்டு)

**பிருந்தன்** (சாமிநாதன் சந்திரமோகனதாஸ்-செங்கலடி - மட்டு

1991-ம் ஆண்டு மட்டு - கிரான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விஜே** (கந்தையா வடிவேல்-கிரான் - மட்டு)

இதே சம்பவத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான,

**தேவராஜன்** (கிரான் - மட்டு)

**விஸ்மா** (கிரான் - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10589)

# —புதிய உலக ஒழுங்கில்—

# புதிய வரலாறு படைக்கும் கெயிற்றி

வரலாற்றின் மிக விசித்திரமான பக்கங்களாக இப்போது கெயிற்றியில் நடக்கும் நிகழ்வுகள் அமையப் போகின்றன. சென்ற செப்டெம்பர் 18-ம் திகதியன்று கெயிற்றி மீது படையெடுப்பு மேற்கொள்ள கடைசி நிமிடம் வரை தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் படைகள் இறுதியில் படையெடுப்பை நிகழ்த்தாமலே கெயிற்றியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டனர். 1989-ம் ஆண்டு பனாமாவிற்குள் படை எடுக்க அனுப்பப்பட்டோரை விட, சோமாலியாவுக்கு அனுப்பப்பட்டோரை விட, கூடுதலான (28.800) படை வீரர் (கடலில் தரித்துநிற்போர் உட்பட) இப்போது கெயிற்றிக்கு அனுப்பப்படுகின்றனர். முன்பு அமெரிக்கநலன்கட்குஎதிரானஇடதுசாரிப் போக்குள்ளவர் என அமெரிக்காவால் வன்மையாக எதிர்க்கப்பட்ட அரிஸ்டீட் இப்போது அமெரிக்கப் போர் வீரர் பாதுகாப்பில் கெயிற்றியில் பதவியேற்கின்றார் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கெயிற்றி மீது படையெடுத்து அதனை அடிமைப்படுத்தி பெரும்அட்டூழியங்களைப் புரிந்த அமெரிக்கர் இப்போது கெயிற்றிய மக்களின் நண்பர்களாகிவிட்டனர். கெயிற்றியில் இளம் பாலர்க்கு இனிப்பு கொடுக்கின்றனர். அதுபோலவே கடந்த 3 வருடங்களாக கெயிற்றியை கொலைக் களமாக்கியோர் சட்டரீதியான மன்னிப்பை பெற்று பாதுகாப்பாக நாடு விட்டு வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர். வரலாற்றின் சக்கர சுழல்வில் நாம் காணும் நேர் முரணெதிர் நிலைகள் இவை.

## ஏழை பங்காளன் அரிஸ்டீட்

ஆனால் இவை எப்படியிருந்த போதிலும் மீண்டும் கெயிற்றியின் ஏழை மக்கள் முகத்திலே மகிழ்ச்சி பரவுகின்றது இருண்டு கிடந்த அவர்கள் வாழ்விலே நம்பிக்கை ஒளியாக அவர்களிடமே மீண்டும் 'புரட்சிகார மதகுரு' அரிஸ்டீட் வந்துவிட்டார்அவர்கள் விரும்பித்தெரிவுசெய்த 'ஏழை பங்காளன்' அரிஸ்டீட் தனது எஞ்சிய 16 மாதகால சனாதிபதி பதவிக்காலத்தை அவர்கள் நலனுக்காகவேபயன்படுத்தப்போகின்றார். 1990-ம் ஆண்டு தனது 37-வது வயதில் கெயிற்றியின் வரலாற்றிலே முதல் தடவையாக நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் 70 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்று சனாதிபதியான அவரை எட்டு மாதகாலமே பதவியிலிருக்க கெயிற்றிய இராணுவம்

போது அடுத்த சனாதிபதித் தேர்தல் 1995-ம் ஆண்டு முடிவில் நடக்க வேண்டும்; 1996-ம் ஆண்டு மாசி மாதத்தில் புதிய சனாதிபதியிடம் பொறுப்பை அரிஸ்டீட் ஒப்படைக்க வேண்டும் இது பற்றி அவரிடமே கேட்கப்பட்ட பொழுது ''பதவியிலிருப்பது அல்ல எனக்கு முக்கியம். அல்லது எனது பதவிக்காலம் எவ்வகையில் கழிந்தது என்பதும் முக்கியமல்ல''. என்றார். அரிஸ்டீட்டை நன்கு அறிந்தோர் அவர் கூற்றின் உண்மையை உணர்கின்றனர்.

ஏனென்றால் அவர் வாழ்க்கை அப்படிப்பட்டது பல நூற்றாண்டுக் காலமாக அடிமைத்தளையில், மூட நம்பிக்கையின் பிடியில் அடக்குமுறையின் கொடுங்கரத்தில் சிக்கித் தவித்த மக்களை மீட்க வந்த 'மேய்ப்பராக' அவர் கருதப்படுகின்றார். கெயிற்றியின் சேரிப்புற மக்களிடமே வாழ்ந்து அவர்கள் நலனையே முதன்மைப் படுத்தி செயற்பட்டவர். மரபு மீறி செயற்படுவதாகக் கூறி அவரை திருச்சபை விலக்கிய போதும் மனம் தளராதவர். அமெரிக்காவில் தங்கியிருந்த போது அமெரிக்க அழுத்தங்கட்கு பணியாமல் அமெரிக்கரின் மனச்சான்றினையே உலுக்கியவர். அமெரிக்க சி.ஐ.ஏ. தொட்டு அவருக்கு எத்தனை எதிரிகள்? எத்தனை கொலை முயற்சிகளில் அவர் தப்பியிருக்கின்றார்? 1990ஆம் ஆண்டு முடிவில் அவர் சனாதிபதியாகிய பின் பாரிய பொருண்மிய மாற்றங்கள் மேற்கொண்டு கெயிற்றிய பொருண்மியத்தை மறுசீரமைக்க முயன்றவர். அமெரிக்க தலையீட்டை தவிர்த்து தன்னையொரு கியூபாவின் காஸ்ரோவாக, லிபியாவின் கடாபியாக சமப்படுத்தியவர். அதன்காரணமாக 'கம்யூனிச மனநோயாளி' என அமெரிக்க செய்தியேடுகளால் தூற்றப்பட்டவர். ஆனால் தொழிலாளிகட்கு வேதன உயர்வு வழங்குமாறு நிர்ப்பந்தித்த போது கெயிற்றியில், 'கொக்கெயின்' போதைப்பொருள் வணிகத்தை தடை செய்ய முயன்ற போது கெயிற்றியின் செல்வந்தர் இராணுவத்தோடு சேர்ந்து அவர் ஆட்சிக்கு முடிவு கட்டினர். அமெரிக்காவின் படை

கெயிற்றிக்கு சென்ற வாரம் திரும்ப முன் அவரிடம் இது பற்றி கேட்கப்பட்ட போது '' அமெரிக்கப் போர்வீரர்இப்போது கெயிற்றியில் உள்ளனர், கெயிற்றிய மக்களைஉயிருடன் இருக்கஉதவுகின்றனர். ஆனால் அங்கு படையெடுப்பு நிகழவில்லை. இந்த யதார்த்தத்திற்கு நன்றி கூறுகிறேன். ஏனென்றால் இந்த அரசியல் வாழ்வில் நான் உணர்ந்தது என்னவென்றால் பகிரங்கமாக கூறப்படுபவை அறிக்கைகளாக விடப்படுபவைஎல்லாமே பொருட்படுத்தப் படுபவையல்ல. நிகழ்ச்சிகளும் செயல்களுமே உண்மையில் கவனிக்கப்பட வேண்டியவை '' என்றார்; இக் கூற்று அவரதுமாறியமனநிலையையே குறிக்கின்றது. ஏனென்றால் மூன்று வருடங்களாக கெயிற்றி மக்கள் பட்ட அவலம், அவரை ஆதரித்தோர் நாள் தோறும் கொல்லப்பட்ட கொடுமைகள் அவரை இம் முடிவுக்கு தள்ளியிருக்கலாம். அதைத் தவிர மீண்டும் நாடு செல்ல அவருக்கு வேறு வழியும் இருக்கவில்லை.

## கெயிற்றியின் போராட்ட வரலாறு

கெயிற்றியின் வரலாறு சோகமும் வீரமும்விரவிய கலவை வரலாறு கொலம்பசால் கண்டு பிடிக்கப்பட்டதாக'கூறப்பட்ட கரிபியன் தீவுக் கூட்டங்களில் ஒன்றாகிய கெயிற்றி அதனால் ஸ்பெயினில் ஆதிக்கத்திற்குட்பட நேரிட்டது. தம்மை எதிர்த்தகெயிற்றியின் தொன்மைக் குடிகளான செவ்விந்தியரை வேரோடு அறுத்த ஸ்பானியர் ஆபிரிக்க கறுப்பின மக்களை அங்கு அடிமைகளாக கொண்டு வந்து சேர்த்தனர். பின்னர் ''கால மாற்றங்களினால் ஸ்பெயினிடமிருந்த கெயிற்றி பிரான்சியர் வசம் 1697-ம் ஆண்டு கைமாறியது பிரான்சியரின் ஆட்சியில் கரும்புத் தோட்டங்களிலே தமது வாழ்நாளை அடிமைக் கூலிகளாக கழித்தகறுப்பினமக்கள்1789ம் ஆண்டு பிரான்சியப் புரட்சியினைத் தொடர்ந்து தமது அடிமைத் தளைகளை அறுத்தனர். ஆயினும் பின் நெப்போலியன் ஆட்சியின் போது அடிமைப்படுத்தப்பட்டு அவர்களின் அடிமைத் தளையை அறுத்த வீரன் டூசியன்ட்

தனர். பிரான்சியர்க்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுத்தனர். பின்னர் பிரான்சு வெளியேறிய பின் 1915ம் ஆண்டளவில் கெயிற்றியில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டதை சாதகமாகப் பயன்படுத்தி முதலாம் உலகப் போருக்கு முன்னதாக அமெரிக்கா இங்கு தலையிட்டது வழமை போல 'தனது மக்களின் நலன்களைப் பாதுகாக்க' என்று அமெரிக்காவுக்கான கெயிற்றியின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றவும்' படை எடுப்பதாகக் கூறி 1934-ம் ஆண்டு வரை தனது கொடுங்கோலாட்சியை அமெரிக்கா இங்கு தொடர்ந்தது இக்காலகட்டத்திலே கெயிற்றிய மக்களின் தேசிய எழுச்சிப் போராட்டங்களை மிகக் கடுமையாக நசுக்கிய அமெரிக்கர் பல்லாயிரம் மக்களை கொன்று குவித்தனர். இக்கால கட்டம் அமெரிக்காவின் வரலாற்றிலே மிகக் கறைபடிந்த, மிக இழிவான இன வாதக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட காலம் என இப்போது அமெரிக்க வரலாற்றாளர்கள் குறிப்பிடுகின்றனர்

இதன் பின்னும் கெயிற்றிய மக்கள் வாழ்வில் விடியல் தோன்றவில்லை. கறுப்பின தேசியவாதத்தை பயன்படுத்தி 1957ஆம் ஆண்டளவில் பப்பா டொக் (PapaDoc'என்றழைக்கப்படும் கொடுங்கோலன் பிரங்கோஸ் டுவாலியர் சதி மூலம் பதவியை பறித்து டுவாலியர் குடும்ப ஆட்சியை தொடங்கினார். கெயிற்றியின் பாமர மக்களைப் பயமுறுத்த வூடோ (Voodoo)என்றழைக்கப்படும் மேற்கிந்திய கறுப்பின மக்களின் மந்திர தந்திர பில்லிசூனிய பழக்கங்களைப் பயன்படுத்தி பெரும் பயங்கர ஆட்சியை இம் மக்கள் மேல் கட்டவிழ்த்து விட்டான். 1971-ம் ஆண்டு இவர் இறக்க இவரது மகனும் 'பேபிடொக்' எனப்பட்ட இன்னொரு டுவாலியர் ஆட்சியைத் தொடர்ந்தார். பல்வேறு குழப்பங்கள் மத்தியில் இவர் 1986-ம் ஆண்டு நாடு விட்டோடி பிரான்சில் தஞ்சம் புகுந்தார். இதன் பின் பல்வேறு மக்கள் கிளர்ச்சிகளும் அடக்குமுறைகளுமாக கெயிற்றியின் வரலாறு விரிந்தது. பின்னர் பல்வேறு அழுத்தங்களால் 1990-ம் ஆண்டு தேர்தல் நடைபெற்று அரிஸ்

தான் தொடக்கி வைத்த ஆட்சி பாமர கெயிற்றி மக்களின் அரசியல், மனித உரிமைகள் பேணப்படும் அவர்கட்கான நல்லாட்சியாக தொடர வேண்டும் என்பதே அரிஸ்டீட்டின் இத்தகைய முடிவுக்கு பிரதான காரணமாகின்றது எனவே அவரது நோக்கம் மீண்டும் இப்போது நிறைவேறுகின்றது.

## சி. ஐ. ஏ யின் திருவிளையாடல்

எனவே இவ் சனநாயக இலக்கை அடைய தான் உதவியதன் மூலம் தனது பழைய களங்கத்தை, கறையைதுடைக்கலாம் என அமெரிக்கா நம்புகின்றது. தான் பதவியிலிருந்தபோது கெயிற்றிய நிலை கண்டு இரங்காதவரான ஜிம்மி கார்ட்டர் பதவி விலகிய பின் கெயிற்றி சென்று அமைதி முயற்சிகளில் ஈடுபடுவதுஇதற்கு தக்க உதாரணம். ஆனால் எது எப்படியிருந்தாலும் அண்மைக் காலத்தில் கூட அமெரிக்க சி. ஐ. ஏ. (C. I. A) கெயிற்றி தொடர்பாக மேற்கொண்ட மிகக் கேவலமான செயற்பாடுகள் அமெரிக்கரின் உண்மை முகத்தினை அம்பலமாக்கி விட்டன. சி. ஐ. ஏ யின் போக்கினால் பெரும அவமான முற்றதாக இன்றைய அமெரிக்க அரசியல் மாறிவிட்டது. அமெரிக்க பத்திரிகைகள் பல இவ்விடயத்தில் சி. ஐ ஏ நடந்த முறையை இப்போது அம்பலப்படுத்திவிட்டன. அண்மைக்காலம் வரை அரிஸ்டீட்டை ஒரு மன நோயாளி, நம்பமுடியாதவர் என்றும் மொன்ட்றியல் நகரில் மன நோய்க்கான மருத்துவம் பெற்றவர் என்றும் சி ஐ ஏ பொய்யாக கூறி வந்ததன் உண்மை நோக்கம் இப்போது புலனாகிவிட்டது. அரிஸ்டீட்டை மீண்டும் சனாதிபதிப் பதவியில்கிளிண்டன் அமர்த்தாமல் பார்ப்பதே இவர்கள் நோக்கம் இது பற்றி அரிஸ்டீட் கருத்து தெரிவிக்கையில் இது ஒன்றும் புதிதல்ல மாட்டின் லூதர் கிங்கையும் மனநோயாளி என்றே சி ஐ.ஏ கூறியது. நான் ஒரு உளவியலாளன் என்கிறமுறையில்இவர்கள் நோக்கம்எனக்குப்புரிகின்றது. ஒருவரது குணவியல்புகளை கொல்லல் (Character Assassination என்பதுஇதுதான்' என்றார்.

பாக இன்னொரு அமைப்பை உருவாக்கியது தான் தனக்கு முக்கிய தகவல்களை தரும் தனது 'ஊதியம் பெறும்பட்டியலில்' இருந்த இமானுவேல் கொன்ஸ்ரான்ட் என்பவரைக் கொண்டு FRAPHஎனபிரெஞ்சுப் பெயரால் சுருக்கி அழைக்கப்படும். கெயிற்றியின் வளர்ச்சிக்கான முன்னணி [Front for Advancemention Progress of Haiti] என ஒரு போலி அமைப்பு கட்டப்பட்டது. தன்னையொரு பல்கலைக்கழக பட்டம் பெற்ற அறிவுசீவி போல காட்டிக் கொண்ட கொன்ஸ்ரான்டின் இவ்வமைப்பு உண்மையிலே ஆயுதம் தாங்கிய குண்டர்களைக் கொண்ட அமைப்பு அரிஸ்டீட்டின் ஆதரவாளர்களைக் கொல்வதும் கெயிற்றிய மக்களை அச்சுறுத்துவதும்அமெரிக்கதலையீட்டிற்கு எதிரான போலிஆர்ப்பாட்டங்களை செய்வதுமே இவர்கள் பணி. இதற்காக பெருமளவு பணம் சி ஐ ஏயால் வழங்கப்பட்டது இப்பணம் கெயிற்றியின் மனித உரிமை மீறல் செயல்கட்கு பயன்பட்டதுமன்றி அமெரிக்காவுக்கு எதிராகவே பயன்பட்டிருப்பது அம்பலமான பின் சி. ஐ. ஏயின் நிலையே இன்று அமெரிக்காவில் கேள்விக் குறியாகி விட்டது அதன் தலைவர் ஜேம்ஸ் வூல்ஸி James Woolsey) யின் பதவிக் காலம் இப்போது எண்ணப் படுகின்றது (அமெரிக்காவின்

## பாலகுமாரன்

உயர் மட்டக்குழுவொன்று கட்டு மீறிப்போய்விட்ட சி. ஐ ஏயின் எதிர்காலம் குறித்து ஆராய்கின்றது- இவர்கள் அனேகமாக வருடாந்தம் 3 பிலியன் டொலர் செலவிடும் 20,000 பேருக்கு மேல் ஆளணிகொண்டஇவ் உளவுத் தாபனத்தின் பணிகளை வெவ்வேறு அமெரிக்க அமைப்புகட்கு பிரித்துக் கொடுக்க வேண்டும் என பரிந்துரைக்கும் என நம்பப்படுகின்றது. இவ்வாறாக சி. ஐ. ஏயின் போக்கு இன்று அமெரிக்க பத்திரிகைகளாலே கடும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுவதோடு பெருத்த அவமானம் என்றும் கருதப்படுகின்றது சி ஐ ஏயோ அரிஸ்டீட் ஒரு மனநோயாளி என்றே திரும்ப வலியுறுத்துவதோடு கொன்ஸ்ரான்ட் தந்த தகவல்களின் அடிப்படையிலே அமெரிக்க படை இலகுவில் கெயிற்றி செல்லமுடிந்தது என்றும் பலதரப்போர் தமக்கு தகவல் தருவோராக இருப்பர் என்றும் அவர்களின் செயல்கட்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனக் கூறி வருகின்றது.

## பழிவாங்கோம்

டும் புதிதாக கட்டியெழுப்ப வேண்டிய பணி காத்து நிற்கின்றது. ''முன்னர் நடந்த கொடுமைக்காக நாம் பழி வாங்கப் போவதில்லை. ஆனால் அவற்றை நாம் மறக்கவும் போவதில்லை'' என கூறும் அரிஸ்டீட் 7000 பேர் கொண்ட கொடிய இராணுவத்தைக் கலைத்துவிட்டு புதித த 1500 பேர்கொண்ட புதிய அணியொன்றை அமெரிக்க உதவியோடு உருவாக்கி வருகின்றார். அவ்வாறே தனியான காவல் துறையும் புதிதாக உருவாக்கப்பட வேண்டும் அதே வேளை கெயிற்றியில் கடந்த 3 வருடங்களாக கொடுகோலராக செயற்பட்ட லெப். ஜெனரல் ராவுல் செட்ராசும் அவரது இராணுவ மேலாளர் பிரிகேடியர் ஜெனரல்பிலிப்ஸ் பியாம்பேயும் காவல்துறைப் பொறுப்பாளர் கேணல் மைக்கல் பிரார்ங் கோசும்நாடு விட்டு சென்றாலும் இவர்களால் பல ஆயிரக் கணக்கில் ஆயுதங்கள் வழங்கப்பட்ட அடியாட்கள் மறைந்து திரிவதும் இராணுவத்தின் கனரக ஆயுதங்கள் மறைக்கப்பட்டுவிட்டதும் அரிஸ்டீட்டின்எதிர்காலம் எத்தகையது என்கிற கேள்வியைஎழுப்புகின்றது;

ஆனால் அரிஸ்டீட்டிற்கு இவை பற்றி கவலையில்லை அவரது கவலை வேலையற்ற 80 விழுக்காடு மக்கள் பற்றியும் கெயிற்றியின் பொருண்மிய மேம்பாடு பற்றியதாகவேயுள்ளது. கெயிற்றியின் 70 விழுக்காடு மக்கள் எழுத்தறிவற்றவர்கள் 80 விழுக்காடு மக்கட்கு சுத்தமான குடிநீர் வசதி கிடையாது. மாதம் 1000 குழந்தைகள் ஊட்ட உணவின்மையால் மடிகின்றனர். பெரும் பகுதி மக்கள் வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புக்களின் உதவியிலே தங்கியிருக்கின்றனர். அதே சமயம் நாட்டின் பணவீக்கமோ சென்ற வருடம் 48 விழுக்காடு; நாணயம் சென்றவருடம் 60 விழுக்காடாக மதிப்பிறங்கியது. இவ்வாறு கெயிற்றியின் சீரழியும் பொருண்மியத்தை கட்டும் பணியில் அரிஸ்டீட் முழுமூச்சாக செயற்பட வேண்டும் அவருக்கு தாராளமாக வெளிநாட்டுதவிகள் கிடைக்கும் என நம்பப்படுகின்றது.இதற்கிடையில் கிளிண்டனோ தனது படைகளை மதிப்போடு உயிர்இழப்புமில்லாமல் திரும்ப அழைப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். அடுத்த 6 மாத காலத்திற்குள் ஐ. நா வினால் அனுப்பப்பட வேண்டிய 6000 பேர் கொண்ட அமைதிப் படையை தனது பொறுப்புக்களை ஒப்படைத்து விலக அவர் இப்போதே தயாராகிவிட்டார். ஏனென்றால் அமெரிக்க மக்கள் முன்னைய அமெரிக்க ஏகாதிபத்திய கன

முகத்திலே மகிழ்ச்சி பரவுகின்றது இருண்டு கிடந்த அவர்கள் வாழ்விலே நம்பிக்கை ஒளியாக அவர்களிடமே மீண்டும் 'புரட்சிகார மதகுரு' அரிஸ்டீட் வந்துவிட்டார் அவர்கள் விரும்பித்தெரிவுசெய்த 'ஏழை பங்காளன்' அரிஸ்டீட் தனது எஞ்சிய 16 மாதகால சனாதிபதி பதவிக்காலத்தை அவர்கள் நலனுக்காகவே பயன்படுத்தப்போகின்றார். 1990-ம் ஆண்டு தனது 37-வது வயதில் கெயிற்றியின் வரலாற்றிலே முதல் தடவையாக நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் 70 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்று சனாதிபதியான அவரை எட்டு மாதகாலமே பதவியிலிருக்க கெயிற்றிய இராணுவம் அனுமதித்தது இராணுவத்தின்சதியால் நாடுவிட்டு தப்பி கடந்த 3 வருடமாக அவர் அமெரிக்காவிலே தனது ''நிர்ப்பந்திக்கப்பட்ட தங்கலை'' மேற்கொள்ள நேரிட்டது இப் கெயிற்றிய சொருண்மியத்தை மறுசீரமைக்க முயன்றவர். அமெரிக்க தலையீட்டை தவிர்த்து தன்னையொரு கியூபாவின் காஸ்ரோவாக, லிபியாவின் கடாபியாக சமப்படுத்தியவர். அதன்காரணமாக 'கம்யூனிச மனநோயாளி' என அமெரிக்க செய்தியேடுகளால் தூற்றப்பட்டவர். ஆனால் தொழிலாளிகட்கு வேதன உயர்வு வழங்குமாறு நிர்ப்பந்தித்த போது கெயிற்றியில், 'கொக்கெயின்' போதைப்பொருள் வணிகத்தை தடை செய்ய முயன்ற போது கெயிற்றியின் செல்வந்தர் இராணுவத்தோடு சேர்ந்து அவர் ஆட்சிக்கு முடிவு கட்டினர். அமெரிக்காவின் படையெடுப்பை அரிஸ்டீட் என்றும் விரும்பியவரல்லர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் பதவியிலிருத்தப்பட்டவர் என்று பெயர் வருவதை அவர் விரும்பியவர் அல்லர். அவர் ஸ்பானியர் ஆபிரிக்க கறுப்பின மக்களை அங்கு அடிமைகளாக கொண்டு வந்து சேர்த்தனர். பின்னர் ''கால மாற்றங்களினால் ஸ்பெயினிடமிருந்த கெயிற்றி பிரான்சியர் வசம் 1697-ம் ஆண்டு கைமாறியது பிரான்சியரின் ஆட்சியில் கரும்புத் தோட்டங்களிலே தமது வாழ்நாளை அடிமைக் கூலிகளாக கழித்தகறுப்பினமக்கள் 1789ம் ஆண்டு பிரான்சியப் புரட்சியினைத் தொடர்ந்து தமது அடிமைத் தளைகளை அறுத்தனர். ஆயினும் பின் நெப்போலியன் ஆட்சியின் போது அடிமைப்படுத்தப்பட்டு அவர்களின் அடிமைத் தளையை அறுத்த வீரன் டூசியன்ட் லொவேச்சு (Toussaint Louverture) கைதாக்கப்பட்டு பிரான்சிய சிறையிலே இடப்பட்டு அங்கு மரணமானார். எனினும் இம் மக்கள் தமது போராட்டத்தை தொடர்ந் கறுப்பின மக்களின் மந்திர தந்திர பில்லிசூனிய பழக்கங்களைப் பயன்படுத்தி பெரும் பயங்கர ஆட்சியை இம் மக்கள் மேல் கட்டவிழ்த்து விட்டான். 1971-ம் ஆண்டு இவர் இறக்க இவரது மகனும் 'பேபிடொக்' எனப்பட்ட இன்னொரு டுவாலியர் ஆட்சியைத் தொடர்ந்தார். பல்வேறு குழப்பங்கள் மத்தியில் இவர் 1986-ம் ஆண்டு நாடு விட்டோடி பிரான்சில் தஞ்சம் புகுந்தார். இதன் பின் பல்வேறு மக்கள் கிளர்ச்சிகளும் அடக்குமுறைகளுமாக கெயிற்றியின் வரலாறு விரிந்தது. பின்னர் பல்வேறு அழுத்தங்களால் 1990-ம் ஆண்டு தேர்தல் நடைபெற்று அரிஸ்டீட் மக்களால் தெரிவான முதல் சனாதிபதியானார். எனவே மீண்டும் கெயிற்றி தனது பழைய இருண்டகாலத்திற்கு செல்லக் கூடாதென்பதே அரிஸ்டீட்டின் நோக்கம் மன நோய்க்கான மருத்துவம் பெற்றவர் என்றும் சி.ஐ.ஏ பொய்யாக கூறி வந்ததன் உண்மை நோக்கம் இப்போது புலனாகிவிட்டது. அரிஸ்டீட்டை மீண்டும் சனாதிபதிப் பதவியில் கிளிண்டன் அமர்த்தாமல் பார்ப்பதே இவர்கள் நோக்கம் இது பற்றி அரிஸ்டீட் கருத்து தெரிவிக்கையில் இது ஒன்றும் புதிதல்ல மாட்டின் லூதர் கிங்கையும் மனநோயாளி என்றே சி.ஐ.ஏ கூறியது. நான் ஒரு உளவியலாளன் என்கிறமுறையில் இவர்கள் நோக்கம் எனக்குப்புரிகின்றது. ஒருவரது குணவியல்புகளை கொல்லல் (Character Assassination என்பதுஇதுதான்' என்றார்.

சி.ஐ.ஏ. செய்தது இது தான் 1991-ம் ஆண்டு அரிஸ்டீட் பதவிவிலக்கப்பட்ட பின் அவரது செல்வாக்கை குறைக்கும் முகமாக அவரது மக்கள் இயக்கத்திற்கு புறம் றது இவ்வாறாக சி.ஐ. ஏயின் போக்கு இன்று அமெரிக்க பத்திரிகைகளாலே கடும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுவதோடு பெருத்த அவமானம் என்றும் கருதப்படுகின்றது சி ஐ ஏயோ அரிஸ்டீட் ஒரு மன நோயாளி என்றே திரும்ப வலியுறுத்துவதோடு கொன்ஸ்ரன்ட் தந்த தகவல்களின் அடிப்படையிலே அமெரிக்க படை இலகுவில் கெயிற்றி செல்ல முடிந்தது என்றும் பலதரப்போர் தமக்கு தகவல் தருவோராக இருப்பர் என்றும் அவர்களின் செயல்கட்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனக் கூறி வருகின்றது.

### பழிவாங்கோம் ஆனால் மறக்கமாட்டோம்

இச் சிக்கல்கள் ஒரு புறம் இரு நாடுதிரும்பிய அரிஸ்டீட் முன் கெயிற்றியை மீண் யத்தை கட்டும் பணியில் அரிஸ்டீட் முழுமூச்சாக செயற்பட வேண்டும் அவருக்கு தாராளமாக வெளிநாட்டுதவிகள் கிடைக்கும் என நம்பப்படுகின்றது. இதற்கிடையில் கிளிண்டனோ தனது படைகளை மதிப்போடு உயிர்இழப்புமில்லாமல் திரும்ப அழைப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். அடுத்த 6 மாத காலத்திற்குள் ஐ.நாவினால் அனுப்பப்பட வேண்டிய 6000 பேர் கொண்ட அமைதிப் படையை தனது பொறுப்புக்களை ஒப்படைத்து விலக அவர் இப்போதே தயாராகி விட்டார். ஏனென்றால் அமெரிக்க மக்கள் முன்னைய அமெரிக்க ஏகாதிபத்திய கனவுகள் காண தமது தலைவர்களைஇப்போது விடுவதில்லை. எனவே அரிஸ்டீட்டினதும் கெயிற்றி மக்களினதும் எதிர்காலம் ஒளிமயமாக வேண்டும் என்பதே எமது நம்பிக்கை.

---

## தென்னாசிய அரசியலில் அனுதாப அலை

# சிறிமா பண்டாரநாயக்கா முதல் சிறிமா திசாநாயக்கா வரை

**ரகுராம்**

அனுதாப அலை இன்று அரசியலில் அதிகம் பிரயோகிக்கப்படும் ஒரு வார்த்தை. நேர்மையான அரசியல்கொள்கையில் தெளிவு என்பவை மறைந்து வெறுமனே உணர்ச்சியைக்காட்டி வாக்கு சேகரிக்கும் ஒரு வித்தையாக இது இன்று வளர்ந்துள்ளது.

முக்கியமாக தென்னாசியாவில் இவ்வார்த்தைக்கு பெறுமதி மிக அதிகமாகவே காணப்படுகின்றது- இலங்கையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அனுதாப ஆதரவின் மூலம் வெற்றி பெற்ற முதலாவது அரசியல் வாதியாகிறார். அன்று அவருக்கு கிடைத்த வெற்றி, சிறிமாவின் தனிப்பட்ட அரசியல் கொள்கைப்பிடிப்புக்காகவோ அல்லது அவர் சார்ந்த கட்சியின் அற்புதமான சாதனைகளுக்காகவோ கிடைக்கப்பெற்றதல்ல. அவரது கணவரான எஸ் டபிள்யூ: ஆர். டி- பண்டாரநாயக்காவின் மரணம் அன்று சிறிலங்காவை வெகுவாக பாதித்திருந்தது. இந்த நிலையில் சிறிமாவின் பாலேற்பட்ட மக்களின் அனுதாப நோக்கே அவருக்கு வெற்றியைத் தந்தது.

இரண்டாவது அனுதாப ஆதரவு பெற்ற அரசியல்வாதிகளாக பாகிஸ்தானில் பாத்திமா ஜின்னா, நுஸ்ரத் பூட்டோ, பெனாசிர் பூட்டோ என்றவாறு கணவன், தந்தை ஆகியோரின் இழப்புக்களின் பின் அரசியலுக்குவந்தவர்கள் குறிப்பிடப்படுவர். இவர்களின் அரசியல் பிரவேசம் முற்றிலும்அனுதாபஆதரவை நம்பியே இருந்தது. பாகிஸ்தானை உருவாக்கிய முகம்மதலி ஜின்னா, ஏற்படுத்திப் போயிருந்த அரசியல் செல்வாக்கு பாத்திமா ஜின்னாவை அரசியலுக்குள் நுழைத்தது. ஆனாலும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் பேரிலான பெண்களின் நிலை அவரை ஒரு வெற்றிகரமான அரசியல் வாதியாக மாற்றவில்லை. சுல்பிகார் அலி பூட்டோ, ஜெனரல் சியா உல் ஹக்கினால் தூக்கிலிடப்பட்டபோது அவரின்பால் பாகிஸ்தான் மக்களும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் கொண்டிருந்த பற்று அவரது மனைவியானநுஸ்ரத்பூட்டோவையும் மகளான பெனாசிர் பூட்டோவையும் பாகிஸ்தான் அரசியலில் நுழையவைத்தது. ஆனால் பாத்திமா ஜின்னாவுக்கு ஏற்பட்ட நிலை இவர்களுக்கு ஏற்படவில்லை. ஏனெனில் பெனாசிர் தனியே தந்தையின் பெயரை மட்டும் பாவித்து ஆதரவைப் பெறாமல் தனது அரசியல் செயற்பாடுகளின் மூலமும் பிரபலமானவர் என்பதும் ஒரு காரணமாகும்.

இதே நிலை இன்னொரு தென்னாசிய இஸ்லாமிய நாடான பங்களாதேஷிலும் ஏற்பட்டது- பங்களாதேஷ் ஸ்தாபகரும் அதன் முதலாவது பிரதமருமான முஜிபுர் ரஹ்மானின் மகளான ஷேக் ஹசீனா வஹீட் அரசியலில் நுழைந்து தனித்து ஒரு கட்சியின் தலைவியாக உயர்ந்துள்ளதை எடுத்துக் கொண்டாலென்ன பங்களாதேஷின்முன்னாள் ஜனாதிபதியான சியாஉர் ரஹ்மானின் விதவை மனைவியான பேகம் காலிதா சியா இன்றுபிரதமராக வந்துள்ளதை கருதினாலென்ன தங்களுக்கு நெருங்கியவர்களின் மரணங்களினால் ஏற்பட்ட அனுதாப ஆதரவே இவர்களையும் அரசியல்வாதிகளாக இனங்காட்டியுள்ளது. ஒரு கருத்தில் பங்களாதேஷையும் பாகிஸ்தானையும் நோக்கும் போது மத அடிப்படைவாதம் அனுதாப ஆதரவிற்கு பணிந்து கொண்ட நிலையையும் அங்கு காண முடிவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் இந்திரா காந்தி உச்சநிலையிலிருந்த போது விமான விபத்தில் கொல்லப்பட்ட அவரது மகன் சஞ்சய்காந்தியின் மரணம் சஞ்சயின் மனைவியான பஞ்சாபிப்பெண்ணான மேனகா காந்தியை அரசியலுக்கு கொண்டு வந்தது. காலப் போக்கில், தனது மாமியாரான இந்திரா காந்தியையே எதிர்த்து சஞ்சயின் அனுதாப ஆதரவை நம்பி தனியே சஞ்சய்விஹார் மஞ்ச் என்ற கட்சியை தொடக்கும் அளவுக்கு மேனகா காந்தி துணிந்ததும் கவனிக்கத்தக்கது முக்கியமாக காங்கிரசின் இளைஞர் அணியை சஞ்சயின் பெயரைச் சொல்லியே தனது பக்கம் இழுக்க முற்பட்ட மேனகா காந்தியின் அரசியல் துணிவு வியக்கத்தக்கது.

இந்திரா காந்தியின் மரணத்திற்குப்பின்பு ராஜீவ் காந்தி பிரதமராக தெரிவாகிய விடயமும், அன்று இரண்டாவது நிலையிலிருந்த நரசிம்மராவ் போன்றோரைவிட இந்திராவின் மரணத்தினாலுண்டான அனுதாப அலைபரவி வியாபித்திருந்ததை காட்டுகின்றது. இந்திராவின் மகன் என்ற முத்திரை குத்தப்பட்டவராக ஒரு விமான ஓட்டி பிரதமராக உருவாகியதற்கு பின்புலக் காரணமானதும் ஒரு மரணமே என்பதில் தவறு இருப்பதாக தெரியவில்லை. இதே நிலை ராஜீவின் மரணத்துக்குப் பின்னரும் தொடர்ந்தது- சோனியா காந்தியை முன்னிறுத்தி அதன்மூலம் ராஜீவினதும் காங்கிரசினதும் வாக்கு வங்கியை சிதையாமல் காப்பாற்றுவதோடு அதற்கும் கூடுதலாக அனுதாப வாக்குகளையும் பெற திட்டமிடப்பட்டது-

சோனியா அந்த நிலையில் அரசியலுக்குள் பிரவேசிக்க விரும்பாத காரணத்தினால் மட்டுமே நரசிம்மராவ் பிரதமராக முடிந்தது. சோனியா அன்று ராஜீவின் மரணத்தின் பின்னர் அவருக்கிருந்த அனுதாப ஆதரவை காட்டி பிரதமராயிருக்க முடியும் என்பதை அரசியல் அவதானிகள் இன்னும் சுட்டிக் காட்டுகின்றனர். இன்று சோனியா அரசியலில்பிரவேசிப்பதற்குவேறு பல காரணங்கள் கூறப்பட்டாலும் ராஜீவின் பெயரிலிருக்கும் அனுதாபம் என்ற அடிப்படையிலேயே சோனியாவின் அரசியல் கட்டிஎழுப்பப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சிறிமா பண்டாரநாயக்காவின் பாதையில் அவரது மகள் சந்திரிகா குமாரதுங்காவும் பிரவேசித்தார். சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரதுங்காவுக்கு இருந்த நட்சத்திரக் கவர்ச்சியும் கீழ்மட்ட மக்களின் பேராதரவும் அரசியல் நாகரிகம் கொண்ட போக்கும் சந்திரிகா அரசியலுக்குள் நுழைவதை ஊக்குவித்தன. ஆனால் கணவரது இறப்பின் மூலமான அனுதாப ஆதரவினை மட்டுமே தளமாக கொண்டு சந்திரிகா அரசியலுக்குள் பிரவேசிக்கவில்லை என்பதுஅவரைமற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. ஏனெனில் விஜயகுமாரதுங்காவின் அரசியல் செயற்பாடுகளுக்கும் அவரது தனிப்பட்ட அரசியல் தோற்றப்பாட்டிற்கும் சந்திரிகாவின் பலமான ஆதரவு முன்பிருந்தே இருந்துவந்துள்ளது. அரசியலில் பட்டும் படாமலும் இருந்த சந்திரிகாவை விஜயகுமாரதுங்காவின் மரணமே முழுமையான அரசியலில் அவரை ஈடுபடவைத்தது வெளிப்படையானது. இந்தவகையில் சந்திரிகா பெற்று வரும் வெற்றிகளிலும் அவரது அரசியல் தளத்திலும் விஜயகுமாரதுங்காவினது மரணத்தின் மூலமான அனுதாப ஆதரவு அலையும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது

இதேபோல் ஒருவார இடைவெளியில் அரசியலுக்குள் அனுதாபத்தின் வழியிலாக நுழைந்தவர்களாக சிறிமானி அத்துலத்முதலியும், ஹேமா பிரேமதாசாவும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களில் சிறிமானி தகுந்தபாதையைதேர்ந்தெடுத்ததாலும், லலித்தின் உறுதியான வாக்குவங்கியொன்று அவருக்கு பக்கபலமாக இருந்ததும் சிறிமானியை இன்று குறிப்பிடத்தக்க அரசியல்வாதியாக்கியுள்ளது. அந்தநிலையில் ஹேமா பிரேமதாசாவின் அரசியல் பிரவேசம் வெறுமனே கேலிக்கூத்தாகப் போயிருக்கின்றது. பிரேமதாசாவுக்கு இருந்த ஆதரவை தகுந்த வகையில் அனுதாப அலையாக அவரால் திரட்ட முடியாமல் போனது. இதற்கு பல காரணங்கள் இன்று கூற

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுகதை

# ஒரு மயக்கம் தெளிந்த போது

எஸ். எஸ். வதனி

ஈழநாதம் வன்னிப்பதிப்பு முதலாமாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசுபெற்ற சிறுகதை

வழமைக்கு மாறாக வீடு கலகலப்பாக இருந்தது. இரண்டு அறை கொண்ட அந்த சிறிய வீடும் முன்னே அமைந்த பெரிய தலைவாசலும் வெள்ளையடித்துஇரண்டு நாட்கள்தான். பார்க்கஅழகாகத்தான்இருந்தது

''தம்பி அனிப்பின காசிலை வீட்டைக் கட்டியிருக்கலாம். அதுக்கிள்ளை இந்த கோதாரியிலே போறபிரச்சினை வந்திட்டுது'' அம்மா தினமும் புலம்புகிற வார்த்தைகள் தான்

அவவிற்கு வெளிநாட்டுக் காசு வந்தும் மற்றவைபோல வீடு இல்லையே என்று ஒரே ஆதங்கம். ஆனால் பூரணிக்கு 38 வருடங்களாக பழகிப் போன இந்த நீண்ட தலைவாசலும் அதன் அகன்ற குந்தும் அவளுக்கு ஏதோ அனுபவங்களையும் ஆதரவையும் கொடுப்பவையாகவே இருந்தன. சோகங்களும் சுமைகளும் அவளை அழுத்தினாலும் நிலவின் தனிமையில் இந்தக்குந்தில் அமரும்போது ஏதோ ஒரு சுகம் அவளைத் தொட்டுச்செல்லும்-

சீக்காளியான அம்மா, சிடுசிடுக்கும் தந்தை, தன்குடும்பத்தோடு ஒதுங்கிக்கொண்ட அக்கா, திருமணமாகிவிட்ட இரண்டு தங்கைகள், தாட்சணியம் மிக்க தம்பி. O/L இரண்டு தடவை தாண்டிவிட்ட குட்டியன் அனைவரினதும் சுமைதாங்கி பூரணிதான் 24 வயதில் ஆசிரியை ஆனபோது சந்தோசத்தில் பட்டுப் பூச்சியாய் பறந்தாள். குடும்பத்தின் வறுமை தீர்ந்து விட்டது என்ற துடிப்பில்.

ஆனால் சுமையை தூக்கி நின்ற சுமை தாங்கிக் கல் என்பது அப்பொழுது புரியவில்லை.

'பிள்ளை பூரணி, கனகம் அக்கா சொல்லுறா இந்தப் பச்சைச் சீலை வேண்டாமாம் சிவப்பை உடுத்தட்டாம் அம்மா சுறுசுறுப்பாகவே இயங்கினாள் பூரணிக்கு சிரிப்பாக வந்தது. கொஞ்சம் முதல் கனகம் அக்காவும் செல்லம் அக்காவும் கிசு கிசுத்தது அவள் காதில் ஈட்டியாகப் பாய்ந்தது.

'பெய்ய செல்லம் உவள் பெடிச்சிக்கு முப்பத்தைஞ்சிக்குமேல வரும் என்ன?

''பின்னை என்ன, எங்கட பெடியன் பிறக்கேக்கே உவள்

மாருக்கே நாலைஞ்சு வயதுப் பெடியள் இருக்கு'

'உந்தக் கலியாணம் 5 வரியத்துக்கு முந்தி வந்தது தானே'

'அதுதான் விதி, பின்னை ஏன் இழுபடுது'

ஒரு நல்ல நாளில் கூட அவள் மனது பாரமாக இறுகியது. அவர்கள் கூறியதுபோல அவள்வாழ்க்கைக்கு காரணம் விதியா? விதி...யா? விதி...யா? இல்லவே இல்லை சீதனம் என்னும் பேய்தான் இந்தப் பெண்ணின் வாழ்க்கையையேமாற்றிவிதிஎன்னும் போர்வையால் போர்த்தி விடுகின்றது.

'அக்கா நான் கொண்டை போட்டுவிடுறன்' தயங்கியபடி உள்ளே வந்தாள் சாந்தி.

'அ...ம்...மா' சிணுங்கியபடி அவள் இரண்டு வயதுக் குழந்தை சட்டையை இழுத்தது

''வேண்டாம் சாந்தி நான் போடுவன்தானே. நீ இவனைத்தூக்கு'' மறுத்தாள்

''ஏன்...ன்க்..கா'' அவள் தயக்கம் கண்களில் தெரிந்தது. சாந்தி மிகவும் அன்பான தங்கை. அவளின் கல்யாண நாள் நேற்றுப்போல இருக்கிறது.

''அக்கா நீங்கள் என்ன சொன்னாலும் நான் கட்ட மாட்டன். நீங்கள் கட்டின பிறகுதான் எனக்கு கலியாணம். எனக்கென்ன இருபது வயது தானே நான் வேலை பார்க்க வேண்டும்'

'சாந்தியம்மா கடைசிலை ஒருதருமே வாழாமல் இருக்க வேண்டி வருமம்மா'

'அதுக்காக நீங்கள் எவ்வளவு நாள் கஷ்டப்படுவியள்'

'பார் சாந்தியம்மா தோட்டக்காணியோடை கொஞ்சக் காசு எண்டுதானே கேக்கினம் இப்ப எவ்வளவு சீதனம் வெளியிலை கேக்கிறான்கள்'

'ஓம் பிள்ளை அக்காசொல்லுறதைகேளன்' அம்மாவிற்கு ஏதோ நடந்தால் சரி தான்.

பூரணிக்கோ ஒவ்வொரு சுமையாக இறக்க வேண்டும் என்ற துடிப்பு. ஆனால் சீதனக்காசை அவள் பிரட்டப்பட்ட பாடு அப்பொழுது தான். எல்லா நகையையும் அடகுவைத்து தம்பியைவெளிநாடு அனுப்பியிருந்தாள். உடனே சாந்தியின் திருமணம் கைகூடிவிட்டது. சாந்தியின் கூற்றில் இருந்த நியாயம் அவளுக்கு புரியாமல் இல்லை

மொரு திருமணம் கைகூட எவ்வளவு நாள் ஆகுமோ பூரணி விதியை நம்பவில்லை ஆனால் வழிகள் எல்லாம் அடைக்கப்பட்டு விட்டன. தம்பி உழைக்க இரண்டு வருடமாவது எடுக்கும் அதற்குள் வட்டி தலைக்கு மேல் ஏறிவிடும்.

கொஞ்சம் வசதியான அக்காவும் மூத்த தங்கையும் கூடகையை விரித்துவிட்டார்கள். ஆனால் பூரணி களைக்கவில்லை. எப்படியோ திருமணம் நடந்து முடியவும் அவள் கடன் சுமை தாங்காமல் தள்ளாடவும் சரியாக இருந்தது.

'பிள்ளை கெதிப்பண்ணு வெளியில் மும்மரமாக ஓடினார்கள்

'மாப்பிள்ளை வீட்டுக்காரர் கொஞ்சப் பேர் வருகினம்'

'போட்டோக்காரன் வந்திட்டானே'

'தம்பின்ர தலைப்பா எங்கை'

வேண்டியவள் இல்லறத்திற்கு தயராகின்றாளா? சீதனம் அவளைப் பார்த்துக் கைகொட்டி நகைத்தது. 'பெண்ணே இது உன் விதி என்று.

'இல்லை... இல்...லை... இ...ல்...லை' இதுவிதியில்லை? மனம் ஓலமிட்டது நினைவு சட்டென விரிந்தது கருங்கூந்தல் காற்றில் பறக்க மூன்று மைல், தொலைவில் உள்ள பாடசாலைக்கு சைக்கிளில் பறந்தாள் பூரணி.

'மூன்று மைல் ஏழுநிமிடம் இருக்கிறது' எட்டி மிதித்தாள். இரண்டு நிமிடத்தின் பின் சில்லுக்குள் சேலை மாட்டிக்கொண்டது. 87-ல் ஆமி நுழைந்தபின் வனாந்தரமாக்கப்பட்ட வீதி. கடைகளோ மனித சஞ்சாரமோ இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது

'என்ன ரீச்சர் நடுறோட்டிலை சேலை சரியோ' குரல் கேட்டு நிமிர்ந்தாள்

ரும் மனிதனே மனிசன் வாழ பணமும் குணமும் இருந்தால் சரிதான்'

'அப்ப பணம் என்னட்டை இருக்கு குணம் உங்களிட்டை இருக்கு நாங்களும் வழலாம் தானே'

அவள் சட்டென நிமிர்ந்தாள். அவன் கண்கள் பளபளத்தது. அதன்பின் அவர்கள் உறவு நாலுபேரைக் கவரும் அளவிற்கு வளர்ந்தது அதன்பின் தான் அப்படியும் நடந்தது.

ஒரு நாள் மாலை அவள் களைத்து வீடு திரும்பிய போது.

'பூரணி வினாயகம் வீட்டாலை குறிப்பு வந்திருக்கு' அம்மா

'.........'

நல்ல 'பொருத்தம்'

'.........'

'அவையள் நிறையக் கேக்கினம் போல திடுக்கிட்டு நிமிர்ந்தாள்

'வீடுவேணுமாம்அதோடை

நேரம் நெருங்க நெருங்க எல்லோரும் அவசரப்பட்டார்கள். தலைவாசல் மூலையில் ரேப் மங்கள வாத்தியம் இசைத்தது. ஜெனரேட்டர் அதை மிஞ்சி ஒலித்தது.

பூரணிகு இவை எதுவுமே பாதிப்பை ஏற்படுத்தவில்லை அவள் மனமும் சிலிர்க்கவில்லை.

கண்ணாடியில் அவளைப் பார்த்தாள் நடுவகிடு பிரித்தாள்.

'ஓ உச்சியில் அத்தனையும் நரைமயிர்! ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனாள். இத்தனை நாளும் ஏன் இது தெரியவில்லையோ சுமையின் அழுத்தத்தில் இதைக் கவனிக்கவில்லையோ? அவசர அவசரமாக மேவி இழுத்து முடிந்தாள் ஒரு பக்கம் தலையைச் சாய்த்தாள்

'கடவுளே காதோரம் யாவும் நரைத்துவிட்டது!

'ஒரு இல்லறவாசி காதோரம்நரைவிழுந்ததும்தன்னைத் துறவறத்திற்கு தயார் செய்கின்றான்' என்றோ ஒரு பேராசிரியர் கூறிய கருத்து

'கொஞ்சம் அப்படியே நில்லுங்கோ, சில்லைக் கழட்ட வேணும்'

'ஐயோ இழுத்து அறுங்கோ நேரம் போட்டுதுஆரும் வந்தாலும்' மனம் படபடத்தது

'அப்ப நிறைய சேலை வைச்சிருக்கிறியள் போல'' முறுவலுடன் தொழில்பட்டான் வினாயகம்.

பத்து நிமிடத்தில் சேலை விடுதலை பெற்றது. நன்றி சொல்ல நினைத்தாள் நா எழவில்லை மனம் சிலிர்த்துக் கொண்டது சைக்கிளை வேகமாக மிதித்தாள்.

'ரீச்சர் நேற்று எவ்வளவு கஷ்டப்பட்டன் ஒரு தாங்ஸ் சொல்லாமல் போட்டியள்'

மறுநாளும் அதே இடம் பதில் வராமல் முறுவலித்தான் மனம் படபட என அடித்தது அன்று தொடங்கிய நட்பு இவ்வாறு நீண்டு சென்றது.

'உங்களுக்கு நிறைய சம்பளம் போலை அதுதான் சீலைகளைக் கிழிக்கிறியள்'

'இல...லை'

'எண்டாலும் உத்தியோகம்

காசு ஒண்டு வரைகேக்கினம்'' அம்மாவின் இயலாமை குரலில் தெரிந்தது

'பணம் என்னுடையது குணம் உங்களிட்டை இருக்கு' நினைவில் அதிர மனதில் வலி எடுத்தது

'வீடும் வயல் காணியும் எண்டம் மீண்டும் அம்மா

...............

'அவற்றை தேப்பன் காசு கட்டாயம் எண்டு நிற்கிறார்'

'பேசாமல் விடுங்கோ எங்களிட்டை என்ன கிடக்கு குடுக்க வீட்டைப்பாருங்கோ இன்னும் மேயேலை மழை வரப்போகுது'

'......' மௌனம் இப்போது அம்மாவின் முறை

வினாயகம் அப்பா ஒரு மாதிரி எண்டு சொன்னவர் தானே அவரிட்டை சொல்லி கதைக்க வேணும் என மனதில் நினைத்தாள். ஆனால் மறுநாள் அவன் அவளைக் கண்டு மறுபுறம் திரும்பியதும் துணுக்குற்றாள்.

'ஏன் பேசாமல் போறியள் பூரணி?

'...........'

லுறார்'

'அவர் தானே சொல்லுறார் நான் நீங்களுமோ எண்டுபயங்......'

அவள் முடிக்கவில்லை

'நான் என்ன ரீச்சர் அவரை எதிர்க்கேலுமே' ரீச்சர்-பூரணியாகி, பூரணிநீயாகி மாறிவிட்ட அவர்கள் உறவு, அவன் ரீச்சர் என்றதும் அவள் சுக்கு நூறாக உடைந்து போனாள்.

அதுமட்டுமல்ல அந்த உறவும் உடைந்து விட்டது என்ற உணர்வு தோன்றியது.

அ...ப்...ப நீ...ங்......க...ள்,

''இதிலை நான் எந்த முடிவும் எடுக்கேலாது'' தீர்மானமாக வந்தது பதில். சைக்கிள் வேகமாக பறந்தது. அதன் பின் தான்.

''வினாயகம் வெளிநாடு போட்டானாம்''

''வினாயகத்திற்கு பேச்சுக் கால் நடக்குதாம்''

''பெம்பிளை அனுப்புகினமாம்.

காலத்துக்குக் காலம் வந்த செய்திகள் அவளை உடைத்து தள்ளியது உண்மை தான்.

''வினாயகத்திற்கு அனுப்பின பெட்டை இடையிலை ஆரோடையோமாறீட்டாம்''

காலம் எப்படி ஓடுகிறது இன்று அதே வினாயகத்திற்கும் அவளுக்கும் திருமணம்.

அவள் நினைவுச்சங்கிலியை வெளியில் இருந்தவர்கள் உடைத்தார்கள்.

''இஞ்சை அண்டைக்கு ஒரு லட்சம் இல்லை எண்டு போனவரை இண்டைக்கு மூண்டு லட்சம் குடுத்து தம்பிக்காரன் வாங்கீட்டான் பாத்தியளே''

''அதோடை இந்த வீடும் நகையுமாம்''

''வீடு திருத்த ஒரு லட்சம் புறிம்பாயாம்''

''விதி ஆரைத்தான் விட்டது அவன் தான் எண்டால் அவன் தான்''

''மாப்பிள்ளை கலியாணம் சின்னனாய் இருக்கட்டும் எண்டாராம்''

''ஏன் அவசரப்படுகினம் தெரியுமே, பெடியள் சீதனம் வாங்கக் கூடாது எண்டு சட்டம் வரப்போதாம். அதுக்கு முந்தி வாங்குவோம் எண்டு தான்''

''38, 40 தாண்டினதை லட்சம் குடுத்து எண்டாலும் கரை ஏத்திப்போடலாம் சட்டம் வந்தால் அதுகளை என்ன செய்கிறது''

''உந்த சீதனக் கொடுமை இல்லாட்டி ஏன் நரை தட்டும் மட்டும் கிடக்குதுகள் என்ன... விதியே?'

அங்கே வந்த காரின் ஒலி எல்லோர் கவனத்தையும் திசை திருப்பியது.

''அக்கா..... அக்கா'' ஓடி வந்தாள் சாந்தி

ஒரு பூவினை கரையில் சொருகினாள்

''பொம்பிளையை கூட்டி வாங்கோ''

''என்ன எழுத்தோ கலியாணமோ''

'இரண்டும் தானாம்'

''அதார் சாட்சி போட நிற்கிறது''

இப்படிப் பல குரல்கள்

''எங்கை சொல்லுங்கோ' றெஜிஸ்ரார்.

சிறிமான் வினாயகம் பிள்ளை ஆகிய நான் இப் பெண் பூரணியை சட்டரீதியாக மனைவியாக்கிக் கொள்கிறேன் இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு எடுத்துக் கொள்வேன் இது சத்தியம்''

''எங்கை நீங்கள்சொல்லுங்கோ''

''சிறிமதி பூரணி ஆகிய நான்............''

''சொல்லன் பிள்ளை''

...............

''அவாவுக்கு வெட்கமாய் கிடக்கு போலை'' ஏளனமான ஒரு குரல்

''வெட்கப்படுற வயது தானே''

''சொல்லன் பிள்ளை''

''சிறிமதி பூரணி ஆகிய நான் இச் சபையில் கூறுவதாவது சீதனப் பேய் பிடித்து மூன்று லட்சம் பணத்திற்காகவும், வீட்டிற்காகவும் திருமணம் புரிய வந்த இவரை இச் சபையோர் சாட்சியாக நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அது மட்டுமல்ல இன்று தொடக்கம் நான் இந்த மண்ணின் விடிவிற்காக தங்கள் உயிரையும் மதிக்காமல். போராடி தங்கள் உடல்களில் வீர மறப் புண்களை ஏந்தி அல்லல்படும் போராளிகளுக்கு தொண்டு செய்யவும் அவர்களைப் பராமரிக்கவும் என் வாழ் நாளைச் செலவு செய்வேன் இது உறுதி'' கணீரென்று ஒலித்த அவள் குரல் அனைவரையும் திகைக்க வைத்தது அவர்க

டது என்ற துடிப்பில்.

ஆனால் சுமையை தூக்கி நின்ற சுமை தாங்கிக் கல் என்பது அப்பொழுது புரிய வில்லை.

'பிள்ளை பூரணி, கனகம் அக்கா சொல்லுறா இந்தப் பச்சைச் சீலை வேண்டாமாம் சிவப்பை உடுத்தட்டாம் அம்மா சுறுசுறுப்பாகவே இயங்கினாள் பூரணிக்கு சிரிப்பாக வந்தது. கொஞ்சம் முதல் கனகம் அக்காவும் செல்லம் அக்காவும் கிசு கிசுத்தது அவள் காதில் ஈட்டியாகப் பாய்ந்தது.

'பெய்ய செல்லம் உவள் பெடிச்சிக்கு முப்பத்தைஞ் சிக்குமேல வரும் என்ன?

''பின்னை என்ன, எங்கட பெடியன் பிறக்கேக்கே உவள் நடக்கிறாள் இப்ப அவன்டை பெட்டையள் இரண்டும் குமராயிட்டு''

'ஏன் உவளின்ரை தங்கை 'அதுக்காக நீங்கள் எவ்வளவு நாள் கஷ்டப்படுவியள்'

'பார் சாந்தியம்மா தோட்டக்காணியோடை கொஞ்சக் காசு எண்டுதானே கேக்கினம் இப்ப எவ்வளவு சீதனம் வெளியிலை கேக்கிறான்கள்'

'ஓம் பிள்ளை அக்கா சொல்லுறதைகேளன்' அம்மாவிற்கு ஏதோ நடந்தால் சரி தான்.

பூரணிக்கோ ஒவ்வொரு சுமையாக இறக்க வேண்டும் என்ற துடிப்பு; ஆனால் சீதனக்காசை அவள் பிரட்டப் பட்ட பாடு அப்பொழுது தான். எல்லா நகையையும் அடகுவைத்து தம்பியைவெளி நாடு அனுப்பியிருந்தாள். உடனே சாந்தியின் திருமணம் கைகூடிவிட்டது. சாந்தியின் கூற்றில் இருந்த நியாயம் அவளுக்கு புரியாமல் இல்லை அவளுக்கு வயது இருபது தான். ஆனால் யதார்த்தமாகப் பார்த்தால் இன்னு வில்லை.

கண்ணாடியில் அவளைப் பார்த்தாள் நடுவகிடு பிரித்தாள்.

'ஓ உச்சியில் அத்தனையும் நரைமயிர்! ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனாள். இத்தனை நாளும் ஏன் இது தெரியவில்லையோ சுமையின் அழுத்தத்தில் இதைக் கவனிக்கவில்லையோ? அவசர அவசரமாக மேவி இழுத்து முடிந்தாள் ஒரு பக்கம் தலையைச் சாய்த்தாள்

'கடவுளே காதோரம் யாவும் நரைத்துவிட்டது!

'ஒரு இல்லறவாசி காதோரம்நரைவிழுந்ததும்தன்னைத் துறவறத்திற்கு தயார் செய்கின்றான்' என்றோர் ஒரு பேராசிரியர் கூறிய கருத்து மனதில் ஒலித்தது மட்டுமல்ல வலியையும் கொடுத்தது.

துறவு நிலைக்கு தயாராகடான் விநாயகம்.

பத்து நிமிடத்தில் சேலை விடுதலை பெற்றது; நன்றி சொல்ல நினைத்தாள் நா எழவில்லை மனம் சிலிர்த்துக் கொண்டது சைக்கிளை வேகமாக மிதித்தாள்.

'ரீச்சர் நேற்று எவ்வளவு கஷ்டப்பட்டன் ஒரு தாங்ஸ் சொல்லாமல் போட்டியள்'

மறுநாளும் அதே இடம் பதில் வராமல் முறுவலித்தான் மனம் படபட என அடித்தது அன்று தொடங்கிய நட்பு இவ்வாறு நீண்டு சென்றது.

'உங்களுக்கு நிறைய சம்பளம் போலை அதுதான் சீலைகளைக் கிழிக்கிறியள்'

'இல...லை'

'எண்டாலும் உத்தியோகம் எண்டா பெருமை தானே'

'ஏன் அப்படி நினைக்கிறியள் உழைக்கிறவன் எல்லா

...............

'அவற்றை தேப்பன் காசு கட்டாயம் எண்டு நிற்கிறார்'

'பேசாமல் விடுங்கோ எங்களிட்டை என்ன கிடக்கு குடுக்க வீட்டைப்பாருங்கோ இன்னும் மேயேலை மழை வரப்போகுது'

'......' மௌனம் இப்போது அம்மாவின் முறை

விநாயகம் அப்பா ஒரு மாதிரி எண்டு சொன்னவர் தானே அவரிட்டை சொல்லி கதைக்க வேணும் என மனதில் நினைத்தாள்; ஆனால் மறு நாள் அவன் அவளைக் கண்டு மறுபுறம் திரும்பியதும் துணுக்குற்றாள்;

'ஏன் பேசாமல் போறியள் பூரணி?

'............'

'அப்பா ஒரு லட்சம் வேணும் எண்டாராம்

'அவர்அப்படித்தான்சொல் ... வாங்கக் கூடாது எண்டு சட்டம் வரப்போதாம். அதுக்கு முந்தி வாங்குவோம் எண்டு தான்''

''38, 40 தாண்டினதை லட்சம் குடுத்து எண்டாலும் கரை ஏத்திப்போடலாம் சட்டம் வந்தால் அதுகளை என்ன செய்கிறது''

''உந்த சீதனக் கொடுமை இல்லாட்டி ஏன் நரை தட்டும் மட்டும் கிடக்குதுகள் என்ன... விதியே?'

அங்கே வந்த காரின் ஒலி எல்லோர் கவனத்தையும் திசை திருப்பியது.

''அக்கா.....அக்கா'' ஓடி வந்தாள் சாந்தி

பூரணி நீண்டவகிடு எடுத்து தலையை அள்ளி முடிந்தாள் ...றுக் கொள்ளவில்லை. அது மட்டுமல்ல இன்று தொடக்

**எஸ். எஸ். வதனி**

கம் நான் இந்த மண்ணின் விடிவிற்காக தங்கள் உயிரையும் மதிக்காமல். போராடி தங்கள் உடல்களில் வீர மறப் புண்களை ஏந்தி அல்லல்படும் போராளிகளுக்கு தொண்டு செய்யவும் அவர்களைப் பராமரிக்கவும் என் வாழ் நாளைச் செலவு செய்வேன் இது உறுதி'' கணீரென்று ஒலித்த அவள் குரல் அனைவரையும் திகைக்க வைத்தது அவர்களுக்கு மயக்கம் தெளிந்த போது அவள் நிதானமாக நடந்து செல்வது தெரிந்தது'

## கவிஞர் ஒன்றுகூடலில்

# 'காலம் எழுதிய வரிகள்'

நீண்ட நாட்களுக்குப் பிறகு கவிஞர் ஒன்று கூடல் நிகழ்வு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது; தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஒன்று கூடல் நிகழ்வில் இளங்கவிஞர்களின் முகங்கள் அதிகமாகக் காணப்பட்டன.

தமிழ்த்தாய் வெளியீட்டகத்தால். தேசிய இனப்பிரச்சினையை முதன்மையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட கவிதை நூல் 'காலம் எழுதிய வரிகள்' என்பதாகும்;

இந்த நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளைப் படைத்துள்ள கவிஞர்களுக்கு மட்டுமே இந்த ஒன்று கூடலுக்கான அழைப்பு இதழ் வழங்கப்பட்டிருந்தது.

மொத்தத்தில் 51 கவிஞர்களின் 54 கவிதைகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

எதிர்பார்த்தபடி அறிவிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டியே ஒன்று கூடல் ஆரம்பமானது-

இலக்கியக்காரர் ஒன்று சேர்ந்தால் அல்லது ஒன்று சேரும் சந்தர்ப்பம் எதேச்சையாக ஏற்பட்டால் வாதப்பிரதிவாதங்களுடன் ஏகப்பட்ட 'இசங்க'ளின் கருத்துச் சர்ச்சைகள் ஏற்படுவதுண்டு- இந்த நிகழ்வில் அப்படி எந்தக் 'கொந்தளிப்பும்' ஏற்படவில்லை.

அமைதியானதாக, ஆழமானதாக... அர்த்தமுள்ளதாக அலட்டல் எதுவுமற்றதாக இந்த நிகழ்வு இடம் பெற்றது-

தமிழ்த்தாய் வெளியீட்டகப் பொறுப்பாளர் திரு; ரவி இந்த ஒன்று கூடலுக்கு தலைமை வகித்தார்,

> ''மரணத்துள் வாழ்வோம்' நூலில் உள்ள கவிதைகளுக்குரியபலர், அக்கவிதைகளுடன் சம்பந்தப்படாதவர்கள் அவர்கள் மரணத்துள் வாழாதவர்கள்''

**வவுனியா - திலீபன்**

அவரது உரையின் போது,

நாம் பல்துறை சார்ந்த பல வெளியீடுகளை வெளியிட்டுள்ளோம் யாழ்ப்பாணத்தில் இன்று 1000 பிரதிகள் வெளியிடுவதே சிரமமான காரியம். எம்மைப் பொறுத்தவரையில் ஆயிரம் பிரதிகள் என்பது சொற்பமே-

நாம் ஒவ்வொரு வெளியீட்டையும் இரண்டாயிரத்திலிருந்து இரண்டாயிரத்து ஐநூறு வரை வெளியிடுகின்றோம்.

இங்கே கவிதை நூல்கள் விற்பனையாவது குறைவு. ஆனால் போராட்டம் சார்ந்த நூலுக்கு இங்கே பலத்த வரவேற்பிருக்கின்றது- போர் உலா, எழுச்சிப் பாடல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்-

பத்தாயிரத்திலிருந்து இருபதினாயிரம் வரை போராட்டம் சார்ந்த பிரதிகளை அச்சிட்டு விநியோகித்துள்ளோம்-

நாம் மேலும்பலரின்எழுத்துக்களை நூல் வடிவமாக்க தயராக இருக்கின்றோம். நூலாசிரியர் ஒருவரின் நூல் வெளியிடப்படும் போது நூலாசிரியருக்கு ஐயாயிரம் ரூபா பணம் கொடுக்கின்றோம். எழுத விரும்புவோர்க்கு இது நல்ல செய்தி,

இப் பணத்தைவிட, புத்தகம் பெறுமதியாக இருப்பினும் தற்போதைய நடைமுறை இது தான் என்றார்.

கலந்து கொண்ட கவிஞர்கள் ரவியின் உரையை மிகஅவதானமாகச் செவிமடுத்ததை அவதானிக்க முடிந்தது. பலருக்கு அவர் சொன்னசெய்தி தேன் வார்த்தது.

இந்த நூலின் கவிதைகளை தேர்வு செய்து தொகுக்கும்பணியைச் செய்தவரான திரு அ. யேசுராசா வரவேற்புரை நிகழ்த்தும் போது,

முருகையன் போன்ற முதிய கவிஞர்களிலிருந்து இளங்கவிஞர்கள் வரை பலரின் கவிதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன குறிப்பாகஇளங்கவிஞர்கள் தேசிய இனஒடுக்குமுறை விடுதலைப் போராட்டம் சார்ந்த வாழ்வனுபவங்களை கவிதை ஊடாக வெளிப்படுத்துவதில் பெரும் ஆர்வம் காட்டி வருவது பெருமை கொள்ள வைக்கின்றது,

'காலம் எழுதிய வரிகள்' என்ற இந்த நூலின் இரண்டாம் தொகுப்பு விரைவில் வெளிவரும்.

தேசிய இனப்பிரச்சினை சார்ந்த பல கவிஞர்களின் கவிதைகளைக் கொண்ட தொகுப்புகள் இரண்டு 85 இறுதிக்குள் ஏற்கனவே வெளிவந்துள்ளன- எனவே அதன் பின்னர் வெளி வந்த - வராத கவிதைகளை தொகுக்க முடிவு செய்தோம் என்றார்-

இதன் பிறகு கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு- புதுவை இரத்தினதுரை கவிஞர்களுக்குக் 'காலம் எழுதிய வரிகள்' நூலை வழங்கிக் கௌரவித்தார்-

அவர் கருத்துத் தெரிவிக்கையில், 85 இறுதியில் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதை நூல் ஒன்று இதே தேசிய இனப்பிரச்சினையைக் கருவாக கொண்டு வெளிவந்தது;

அதில் கவிதை எழுதியவர்களில் பலர் அக் கவிதைகள் சொல்லும் செய்தியுடன் சம்பந்தப் படாதவர்கள். அவர்கள் மரணத்துள் வாழாதவர்கள்.

இங்கு இந்த நூலில் கவிதை வரைந்தவர்கள் ஏதோ ஒருவகையில் போராட்டத்துடன் கலந்தவர்கள். மூவர் போராடி மடிந்தவர்கள். இங்கு இருப்போரை வரிசையாக எண்ணிப் பார்த்தால் புரியும் என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன் எழுந்து தமது கருத்தைத் தெரிவிக்கையில்-

இதை நல்ல முயற்சி என்றே நான் சொல்வேன்- தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பல சிறுகதைகளும் தொகுப்பாக வெளிவர வேண்டும்

[6ஆம் பக்கம் பார்க்க]

## இனியும் தாங்காது

இனியொரு புதுத் தினம்
எங்களுக்குப் பிறக்கட்டும்.
உதிர்ந்த உயிர்கள்
ஆகாய வீதியில்
அணி செய்து நின்று
பூமாரி பொழியட்டும்.
துளிர்த்த குருதியெல்லாம்
துயிலட்டும் இந்த மண்ணில்.

இனியும்
எங்கள் மனம் தாங்காது.
எரியும் திரிகளுக்கு
எண்ணெய் ஊற்ற
நெஞ்சு துடிக்கிறது.
புலரட்டும் நல்ல பொழுதுகள்
அது பார்த்துப் புன்னகைக்குமே
துயில் மேடுகள்.

இதோ,
பூகோளப் படத்தில்
ஒரு புள்ளித் தீவில்
ஈழத் தமிழன் என்றொருவன்
இருக்கின்றான்.
இவன் ஈன நிலைகண்டு
துள்ளுவான்.
அறியுமே உலக இனம்.
அழகுத் தமிழ் மணம்
வீசுமே அங்கெல்லாம்.

-அல்லையூர் தர்மினி

# ஐ. தே. க ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு

# ரணிலின் பின்வாங்கலா? தோல்வியா?

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நானே ஐக்கியதேசியக்கட்சியின்தலைவன். எனது வழி நடத்தல் மூலம் கட்சியை மீண்டும் நல்ல முறையில் கட்டியெழுப்புவேன் என புதியஎதிர்க்கட்சி தலைவரும் கட்சியின் பிரதித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

முறைப்படி ரணிலுக்கே கிடைக்கவேண்டிய இப்பதவி இடையில் திடீரென கட்சிக்குள் புகுந்து தட்டிக்கொண்ட காமினி திசாநாயக்காவின் மறைவைத்தொடர்ந்து அவரிடம் மீண்டும் ஒப்படைக்கப் பட்டுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பதவி காமினியினால் தட்டிச் செல்லப்பட்ட போது நாசுக்காக கட்சிக்கு எனது வழிநடத்தல் இன்னும் தேவைப்படவில்லை போலிருக்கிறது அது தேவைப்படும் போது நான் வழி நடத்த முன் வருவேன் அதுவரை என்னைவிட மூத்தவர்கள் கட்சியை வழி நடத்துவதாக, ரணில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது

தற்போதும் ஜனாதிபதி வேட்பாளராக திருமதி சிறிமா திசாநாயக்கா நியமனம் செய்யப்பட்டதையும் அவ்வளவாக பெரிது படுத்தாத அவர் தானேஅதனை விட்டுக்கொடுத்த தோரணையில் நடந்து கொண்டார். இது அவரின் அரசியல் சதுரங்கத்தின் வெற்றியா? அல்லது தோல்வியிலிருந்து தப்பும் முயற்சியா? என்பதை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தான் நிர்ணயம் செய்யவேண்டும்.

பிரேமதாசாவின் மறைவு தொடக்கம் காமினி திசாநாயக்காவின் மறைவு வரையிலான காலப்பகுதியில் ரணில் கட்சியில் தனது இடத்தை தக்க வைத்துக்கொள்ள பெரும் சவால்களை எதிர் நோக்க வேண்டி இருந்தது. குறிப்பாக பிரேமதாசாவின் மறைவைத் தொடர்ந்து மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்ட காமினி திசாநாயக்கா கட்சிக்குள் செய்த சதிவேலைகள் ரணிலின் நிலையை வெகுவாக பாதித்தது குறிப்பிடத்தக்கது

இதே போன்றே இன்று காமினி திசாநாயக்காவின் மறைவைத் தொடர்ந்து திருமதி சிறிமா திசாநாயக்காவின் ஜனாதிபதி வேட்பாளர் நியமிப்பாலும் ரணில் பாதிக்கப்பட்டுள்ளார் என கூறப்படுகின்றது ஐக்கிய தேசிய கட்சியின் கட்சி யாப்பின்படி ஜனாதிபதியாக கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்படுபவரே கட்சியின் தலைவர் பதவியையும் ஏற்க வேண்டும் அவ்வாறெனில் சிறிமா திசாநாயக்காஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் அவரே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவியாக நியமனம் பெறுவார். இந்த நிலையில் ரணில் பிரதி தலைவராக நியமனம் பெறலாம்.

ரணிலின் அரசியல் வாழ்வில் நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலை இது. ஏனெனில் சிறிமா திசாநாயக்கா ஐ.தே க.வுக்கு புதியவர். ஓர் சாதாரண சட்டத்தரணியான இவர் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் சார்பில் போட்டியிட்டு தெரிவுசெய்யப் பட்டவர். இதனைத் தவிர அரசியலுக்கும் இவருக்கும் பெரிய அளவில் தொடர்பு எதுவும் இல்லை. அதாவது காமினி திசாநாயக்காவின் மனைவி என்பதை தவிர.

இந்த நிலையில் இவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தோல்வி அடையும் ஒரு நிச்சயமான நிலையில் அனுதாப அலைகளுடன் சேர்ந்து ஒரு சில ஆயிரம் வாக்குகளாவது கிடைக்கட்டும் என்ற எண்ணத்தில் நியமிக்கப்பட்டார் என்பதே இன்று அரசியல் அவதானிகளுக்கு ஏற்பட்டுள்ள கேள்வியாகும்,

> சிறிகோத்தாவின் முன் ரணில் வந்திறங்கியதும், ஏற்கனவே ஒலித்துக் கொண்டிருந்த சிறிமா திசாநாயக்கா சார்பான கோஷம் மேலும் உச்சமாகியது அப்போது அங்கு எழுந்த ரணில் ஆதரவு கோஷங்கள் அமிழ்ந்தே ஒலித்தது ஐ.தே.கவில் ரணிலின் நிலை இன்னும் உறுதியாகவில்லை என்பதை இது வெளிப்படையாகவே காட்டியது!

அதாவது காமினி திசாநாயக்காவின் மரணத்தால் எழுந்த அனுதாப அலை எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை நடைபெறும் தேர்தல் தான் காட்ட முடியும். ரணிலுக்கு ஏற்பட்ட இந்த நிலையினை ஐக்கிய தேசிய கட்சியில் சிறிசேன கூரே மற்றும் பலரும் இதனை விரும்பவில்லை.

எனவே கட்சிக்குள்ளே சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக்கப்பட்டதன் எதிரொலியாக மீண்டும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஓர் பிளவு ஏற்பட இடமிருப்பதாகவும், இதன்காரணமாக முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாசா போன்றோர்வெளியேறலாம்எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. இதனைவிடரணில் குழுவினர் மீது மீண்டும் அழுத்தங்களை பிரயோகித்து அவர்கள்மீது நடவடிக்கைஎடுக்கப்படலாம் எனவும் அனுமானிக்க இடமுண்டு.

ஐக்கிய தேசிய கட்சியின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில் அனேகர் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்வதினால் தான் ரணிலுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியில் குடும்ப ஆதிக்கம் இல்லை. எனப் பறைசாற்றி பிரேமதாசாவின் மறைவைத்தொடர்ந்து அவரின் மனைவிக்கு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இடம் கொடுக்காது புறந்தள்ளிய ஐ.தே.க இன்று எந்த வகையில் சிறிமா திசாநாயக்காவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் பதவி வழங்கியது என்பது ஓர் ஆச்சரியமான விடயமாக இருக்கின்றது. இதனால் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட எதிர்காலத்தில் கட்சியை விட்டு வெளியேறினால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஒரு முன்னாள் ஜனாதிபதியின் மனைவிக்கு உள்ள அந்தஸ்தை விட ஜனாதிபதி வேட்பாளரின் மனைவிக்கு இன்று கூடிய அந்தஸ்தை ஐ.தே.க வழங்கியுள்ளதாகவும இதனை பிரேமதாசா ஆதரவாளர்களினால் ஏற்றுக்கொள்ளவோ, அன்றி சீரணிக்கவோமுடியாத நிலை காணப்படுகின்றது ஆனால் ஹேமா பிரேமதாசாவின் நிலையை மேலும் பாதிக்கும் என எதிர்வு கூறப்பட்டாலும், ஹேமா பிரேமதாசா அரசியல் கண்ணியத்துடனும் தன் மானத்துடனும் நடந்துகொள்வார் என கருத முடியாதுள்ளது.


நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா தோல்வி அடைந்தால் அவர் அரசியலில் மீண்டும் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே காணப்படும். எனெனில் சிறிமா திசாநாயக்காவின் தோல்வியின் பின்னர் ரணில் தலைமை ஏற்றவுடன் கட்சியில் தன்னை பலப்படுத்த முற்படுவார் என்பதும் இதன் மூலம் முன்னர் தான் விட்ட பிழைகளை உணர்ந்து அவை மீண்டும் நடைபெறாதவாறு செயல்படுவார். என்பதும் வெளிப்படையானது.

எனினும் காமினியின் மறைவைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகமான சிறிகோத்தாவில் நடைபெற்ற ரணிலுக்கு எதிரான சம்பவங்கள் அவருக்கு இன்னும் பலமான எதிரணி ஒன்று இருப்பதை காட்டுகின்றது

நிமலராஜன்

ரணில் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டமை அவரை கொலை செய்யப் போவதாக விடுத்த மிரட்டல்கள் சிறிமா திசாநாயக்காவை ஐ.தே.க வில் மேலும் உறுதிப்படுத்த காமினி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் இயங்கி வருவதைகாட்டி நிற்கின்றது.

ரணில் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டமை அவரை கொலை செய்யப் போவதாக விடுக்கப்பட்ட மிரட்டல்கள் சிறிமா திசாநாயக்காவை ஐ.தே.க. வில் மேலும் உறுதிப்படுத்த காமினி ஆதரவாளர்கள் எடுக்கும் உத்தேச நடவடிக்கைகளே என்பது கவனிக்கத்தக்கது. எனவே, காமினி மறைந்தும் ரணிலுக்கெதிரான கைகள் இன்னும் ஓய்ந்துவிடவில்லை என்பது தெளிவாகிறது ஒருவகையில் ரணில்- காமினி பூசல் வேறுவகையில் தொடருவதையும் இது காட்டுவதாகவே உள்ளது




## நீழல்

உனது சித்தம் பலித்ததெனில்
கண்திறந்துபார் சித்தார்த்தனே!
தலை நிமிரா மனிதரில் புணர்ந்துள்ள
கரிப்படிமத்தை
பற்றற்ற விழியால் பார்!
இருள் கவியும் 'துயரம்
சுமையென உணரும் காலம் மீந்திருக்கிறதே
செவிதிற,
பறையொலிக்கும் அழுகுரலில்
உன் சித்தம் கரையுமே ...
போதிசத்வா!
மீந்திருக்கிறதே இன்னும்
ஞானம் பெறவேண்டிய எல்லை......

-கருணாகரன்

# கச்சதீவை கபளீகரம் செய்யுமாறு

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் கச்சதீவு தொடர்பான பிணக்குகள் இருந்து வந்துள்ளன. ஏறக்குறைய 50 வருடங்களுக்கு மேலாக (1921-1974) இருந்துவந்த கச்சதீவு தொடர்பான பிணக்

இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக இப்பகுதியில் அனுபவித்துவந்த உரிமைகளை தொடர்ந்தும் அனுபவிப்பதற்கு வசதியாக 5 வது, 6வதுமான இரண்டு முக்கிய சரத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

5 வது சரத்தானது ''இந்திய மீனவர்களும் யாத்திரிகர்களும் இதுவரை அனுபவித்தது போல கச்சதீவுக்

பதி தேர்தல் தான் நிர்ணயம் செய்யவேண்டும்;

பிரேமதாசாவின் மறைவு தொடக்கம் காமினி திசாநாயக்காவின் மறைவு வரையிலான காலப்பகுதியில் ரணில் கட்சியில் தனது இடத்தை தக்க வைத்துக்கொள்ள பெரும் சவால்களை எதிர்

ரணில் பிரதி தலைவராக நியமனம் பெறலாம்.

ரணிலின் அரசியல் வாழ்வில் நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலை இது. ஏனெனில் சிறிமா திசாநாயக்கா ஐ.தே.க.வுக்கு புதியவர். ஓர் சாதாரண சட்டத்தரணியான இவர் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் சார்பில்

எனவே கட்சிக்குள்ளே சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக்கப்பட்டதன் எதிரொலியாக மீண்டும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஓர் பிளவு ஏற்பட இடமிருப்பதாகவும், இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாசா போன்றோர்வெளியேறலாம்எனவும்

ஆனால் ஹேமா பிரேமதாசாவின் நிலையை மேலும் பாதிக்கும் என எதிர்வு கூறப்பட்டாலும், ஹேமா பிரேமதாசா அரசியல் கண்ணியத்துடனும் தன் மானத்துடனும் நடந்துகொள்வார் என கருத முடியாதுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி

ஆதரவாளர்கள் எடுக்கும் உத்தேச நடவடிக்கைகளே என்பது கவனிக்கத்தக்கது. எனவே, காமினி மறைந்தும் ரணிலுக்கெதிரான கைகள் இன்னும் ஓய்ந்துவிடவில்லை என்பது தெளிவாகிறது ஒருவகையில் ரணில்-காமினி பூசல் வேறுவகையில் தொடருவதையும் இது காட்டுவதாகவே உள்ளது

மீந்திருக்கிறதே இன்னும்
ஞானம் பெறவேண்டிய எல்லை……

-கருணாகரன்

# கச்சதீவை கபளீகரம் செய்யுமாறு இந்தியாவில் கோஷம் வலுக்கிறது

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையில் கச்சதீவு தொடர்பான பிணக்குகள் இருந்து வந்துள்ளன. ஏறக்குறைய 50 வருடங்களுக்கு மேலாக (1921-1974) இருந்துவந்த கச்சதீவு தொடர்பான பிணக்குகள் 1974-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய பாரம்பரிய நீர்ப்பரப்பு எல்லை தொடர்பாக ஒப்பந்தத்தின் மூலம் முடிவுக்கு வந்தது. ஆயினும் 20 வருடங்களின் பின்னர் இன்று மீண்டும் கச்சதீவு தொடர்பான பிணக்குகள் தலைதூக்கியுள்ளன.

இதுவரைகாலமும் அமைதி வலயமாகக் காணப்பட்ட கச்சதீவும் அதன் கடற்பரப்பும் 1983-இன் பின்னர் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் பின்னர் கலவரம் நிறைந்த பிரதேசமாகவும் இரத்தக்களரி நிறைந்த பிரதேசமாகவும் மாறியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக இலங்கையின் வடபகுதி கடற்பிராந்தியம், தடை செய்யப்பட்டபாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டமையும், தடையையும்மீறி பாதுகாப்புவலயத்துள் பிரவேசித்த தமிழகத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர்கள் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதல்களுக்குள்ளாகியமையும் இத்தீவு தொடர்பான சர்ச்சை எழுவதற்குக் காரணமாயிற்று.

கச்சதீவையும் அதனைச் சூழவுள்ள கடற்பரப்பிலும் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளினால் 1994 நடுப்பகுதி வரை 84க்கு மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டும், 162 பேர்வரையில் காயப்படுத்தப்பட்டும்உள்ளனர். 60-க்கு மேற்பட்ட ரோலர்கள் சேதமாக்கப்பட்டுள்ளது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய நிகழ்வுகள் மாநில ரீதியிலும், தேசியரீதியிலும் இந்தியாவைக் கொதிப்படையச் செய்துள்ளது. இச்செயல்களைக் கண்டித்து தமிழகம் எங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கண்டனப் பேரணிகளும் நடைபெற்றுள்ளன. கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வருகின்ற உரிமைகள் தொடர்பாகவும், கடல வளத்துறையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும் பல்கலைக்கழக மட்டத்திலும், இத்துறை சார்ந்த நிபுணர்கள் மட்டத்திலும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. மாநில, மற்றும் மத்திய அரசுகள் மட்டத்தில் கச்சதீவு தொடர்பாக எழுந்துள்ள உணர்வலைகளும். சருத்துக்களும் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலைச் செய்யமுடியாது முடங்கிக்கிடக்கும வடபகுதியில் வாழும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மீனவர்களின் எதிர்காலத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்தியா எடுத்து வரும் நிலைப்பாடானது வடபகுதிவாழ் மீனவர்களுக்கு எத்தகையபாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதைக் கவனத்திற் கொண்டு அணுகுமுறைகள் மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

## கச்சதீவின் புவியியல் பின்னணி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒடுங்கிய நிலப் பரப்பாலான பாக்குநீரிணையின் மையப்பகுதியில் இத்தீவு அமைந்துள்ளது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெடுந்தீவுக்குத் தென்மேற்கே 9.8 கிலோ மீற்றர் தொலைவிலும் தலைமன்னாருக்கு வடக்கில் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கிலும் இது அமைந்துள்ளது. 1.5 கி.மீ. நீளத்தையும், 300 மீற். அகலத்தையும் கொண்டுள்ள இத்தீவு ஏறக்குறைய 7கி. மீற்றர் சுற்றளவையும் கொண்டுள்ளது. எந்தத் தரமான உலகப்படத்திலும் இது காட்டப்படவில்லை. இதன் கரையோரத்தின் சில பகுதிகள் மணற்றிட்டுக்களையும் சிலபகுதி முருகைக் கற்பார்களையும் கொண்டதாக விளங்குகின்றது. அவ்வப்போது தென்படும் கடற் பாம்புகளைத் தவிர எவ்வித உயிரினங்களும் இங்கு இல்லை. நீண்டகாலமாக மக்கள் வாழிடமற்ற பகுதிகளாகவே இத்தீவு காணப்படுகின்றது. இத்தீவினைச் சூழவுள்ள கடற்பகுதியானது மீன்பிடித்தொழிலுக்கு வாய்ப்பான சமுத்திரச் சூழலைக் கொண்டுள்ளது. ஆழம் குறைவாகக் காணப்படுகின்ற இக் கடற்பகுதி அடித்தளம் சேறும், மணலும் கலந்து காணப்படுகின்றது கடலட்டை, சங்கு, இறால் போன்ற அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற கடலகப் பொருட்கள் இப்பகுதியிலேயே கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றது. ''பிரோன்ஸ்பாங்'(இறால்வங்கி) என அழைக்கப்படும் இப் பகுதியில் வருடந்தோறும் பெருந்தொகையான இறாலும் மீனும் உற்பத்தி செய்யப்படுகின்றது-

கச்சதீவுப் பகுதிகளில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோர்கள் இத்தீவில் தற்காலிகமாகத் தங்கி இளைப்பாறுவதுடன் மீன்களைக்கருவாடிடல். வலைகளை உலரவிடல், போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதும் உண்டு. இத்தீவு சார்ந்து அட்டை சங்குகுளித்தல்நடவடிக்கைகளும் நடைபெறுவதுஉண்டு 2-ம் உலக யுத்தத்தின் போது இப்பகுதி துப்பாக்கிச் சுடுதல், குண்டுவீச்சுப் பயிற்சிகள் மேற்கொள்ளும் தளமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைவிட புனித அந்தோனியார் சொரூபம் ஒன்று வைக்கப்பட்டு சிறிய தேவாலயம் ஒன்றும் கட்டப்பட்டு வருடந்தோறும் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் திருவிழா கொண்டாடப்பட்டும் வருகிறது. இத்திருவிழாவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்களும் பெருந்திரளாக பங்குபற்றுவதுமுண்டு


இவ்வாறாக மக்கள்வாழிடமற்றபகுதியாகஇருந்தபோதிலும் தமிழக மற்றும் இலங்கை வடபகுதி மீனவர்களால் பல்வேறு பொருளாதார கலாசார நடவடிக்கைகளுக்காக இத்தீவினைப் பயன்படுத்தியமையால் முக்கியத்துவமுடைய ஒரு தீவாக விளங்கியுள்ளது இத்தகைய முக்கியத்துவம் இத்தீவினை இரு நாடுகளும் உரிமை கோருவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது.

## இலங்கை -இந்திய கடல் எல்லைகள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒடுங்கிய கடற் பகுதியானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. வங்களாவிரிகுடாப் பகுதி
2. பாக்குநீரிணைப் பகுதி
3. மன்னார்க் குடாப்பகுதி

1971-ம் ஆண்டுவரைஇலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில திட்டவட்டமான கடல் எல்லை வகுக்கப்படவில்லை 1971 இல் இலங்கை தனது ஆள்புல எல்லையை 12 மைல்களாகவும் 200 மைல் தூரம் வரையிலான பகுதியைப் பிரத்தியேகப் பொருளாதார வலயமாகவும் பிரகடனப்படுத்தியது. ஆயினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பகுதி ஒடுங்கிய கடற்பகுதியாகக் காணப்பட்டமையால் அகலாங்கு.நெட்டாங்கு அடிப்படையில் எல்லைகளை வகுக்கவேண்டியதாயிற்று இதனடிப்படையில் 1974 இல் பாரம்பரிய நீர்ப்பரப்பு எல்லை தொடர்பான ஒப்பந்தப்பிரகாரம் ஆதாம் பாலத்திலிருந்து பாக்குநீரிணைவரையிலானகடற்பகுதிக்கும், 1976இல்




வங்காளவிரிகுடாப்பகுதி மற்றும் மன்னார்குடாப் பகுதி கடற்பரப்பிற்கும் அகலாங்கு, நெட்டாங்கு அடிப்படையில் கடல் எல்லை வகுக்கப்பட்டது. 1974 ம் ஆண்டு போடப்பட்ட எல்லையே கச்சதீவுடன் தொடர்புடைய எல்லையாகும்

கச்சதீவு அமைந்துள்ள பாக்குநீரிணைப் பகுதிக்கான எல்லை வகுத்தல் உடன்படிக்கையில் கச்சதீவானது இலங்கையின் எல்லைக்குள் வருகின்றபோதிலும் இந்திய மீனவர்கள் பாரம்பரியமாக இப்பகுதியில் அனுபவித்துவந்த உரிமைகளை தொடர்ந்தும் அனுபவிப்பதற்கு வசதியாக 5 வது, 6வதுமான இரண்டு முக்கிய சரத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

5 வது சரத்தானது ''இந்திய மீனவர்களும் யாஸ்திரிகர்களும் இதுவரை அனுபவித்தது போல கச்சதீவுக்குச் செல்லும் உரிமையைப் பெறுவர். தொடர்ந்தும் அவ்வுரிமையை அனுபவிப்பர் இந் நோக்கங்களுக்காகப் பிரயாண ஆவணங்களோ விசாக்களோ இலங்கையிலிருந்து பெறவேண்டுமென தேவைப்படுத்த முடியாது இதற்கு அவசியமும் இல்லை. இலங்கை இதற்கு நிபந்தனைப்படுத்தவும் முடியாது'' என்பதும்,

6வது சரத்தானது, ''இலங்கையினதும்''இந்தியாவினதும் படகுகள் மற்றவரின் நீர்ப்பரப்பினுள் ஒவ்வொருவர்-நீர்ப்பரப்புபகுதிகளிலும் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பர்'' என்பதுமாகும்.

1976 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஆதாம் பாலத்திலிருந்து மன்னார்க்குடா வரையிலான பகுதிக்கும், பாக்கு நீரிணையிலிருந்து வங்காளவிரிகுடாப் பகுதிக்கும் உரியதாகும். ஒரு நாட்டின் எல்லைப்பகுதிக்குள் மற்ற நாட்டின் அனுமதியின்றி எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது'' என இவ் ஒப்பந்தம் கூறுகிறது.

மேற்குறிப்பிட்ட இவ்விரண்டு ஒப்பந்தங்களும் வேறுபட்ட இயல்புகளைக் கொண்டதாகும். 1974 ஒப்பந்தமானது பாக்குநீரிணைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களும் இலங்கை -இந்திய கடற்பரப்பில் தொடர்ந்தும் பாரம்பரிய உரிமைகளை அனுபவிக்க வழிகோலுகிறது. அதே வேளை 1976 ஒப்பந்தம் வங்காள விரிகுடாக் கடலிலும், மன்னார்க்குடாக் கடலிலும் தத்தமது எல்லைக்குட்பட்ட பகுதிகள் தவிர மற்றைய நாட்டின் எல்லைக்குள் செல்வதைத் தடைசெய்கின்றது.

எவ்வாறாக இருந்தபோதிலும், இருபகுதி மீனவர்களும் இருநாட்டுப் பகுதிக் கடற்பரப்பிலும் சென்று தமது தொழில் முயற்சிகளைமேற்கொண்டே

திரு. சூசை ஆனந்தன்
விரிவுரையாளர், புவியியற்றுறை

வந்தனர். இருநாட்டு அரசுகளும் இதைக் கண்டும் காணாதது போலவே இருந்து வந்தன. துரதிஷ்டவசமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங்கை அரசு பாதுகாப்பு கருதி வடபகுதி கடற் பகுதியினை தடைசெய்யப்பட்ட வலயமாகப் பிரகடனம் செய்தது. முதன் முதலில் கரையிலிருந்து 5 மைல்களுக்கப்பால் இலங்கை இந்திய எல்லைக்குட்பட்ட பகுதியினையும் (தலைமன்னாரிலிருந்து - சுண்டிக் குளம் வரை) 1990இன் பின்னர் வடபகுதி முழுவதையும் இவ்வாறு தடைசெய்யப்பட்ட வலயமாக பிரகடனம் செய்தது இதன் விளைவாக இலங்கையின் வடபகுதி மீனவர்கள் முற்றாக மீன்பிடி செய்யத் தடைசெய்யப்பட்டனர் ஆயினும், இந்திய மீனவர்கள் இலங்கையின் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் தடையையும் மீறி மீன்பிடித்தலில் ஈடுபடலாயினர். இதன்காரணமாக சிறிலங்கா கடற்படையினரின் கடும் தாக்குதல்களுக்குள்ளாகினர். இதன் காரண

(7ஆம் பக்கம்பார்க்க)

# பால்டிக் கடலில் 1000 பயணிகளுடன் கடந்த மாதம் மூழ்கிய 'எஸ்தோனியா'

உலகம் இன்று அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் ஒன்றை ஒன்று விஞ்சும் அளவிற்கு வளர்ந்து விட்ட வேளையில், அதிநவீன வசதிகள் கொண்டதோடு தொழில் நுட்பத் திறனுடன் உருவாக்கப்பட்டு மிகவும் பாதுகாப்பானது என உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த 'எஸ்தோனியா', ஆயிரம் பயணிகளுடன் பால்டிக்கடலில் சில நிமிடங்களிலேயே மூழ்கியமை உலகையே பெரும் அதிர்ச்சியிலாழ்த்தியுள்ளது:

தளத்தில் 1000டன் நீர் புகுந்து கொண்டுள்ளதாக கம்பியூட்டர் மீண்டும் அபாயத்தை வெளிப்படுத்தியது: அதன் பின் தான் கப்பலில் தண்ணீர் புகுந்து கப்பல் ஒரு பக்கமாக சாய்ந்து மூழ்கிக் கொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்: நள்ளிரவு வேளை ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபயணிகளின் செவிகளுக்கு கப்பல் மூழ்குகிறது என்ற அபாய அறிவிப்பு எட்டியதும் அதிர்ச்சியடைந்தவர்கள் அதிலிருந்து விடுபட்டு உயிர் காக்கும் படகு, றிக் கொள்வதிலேயே கவனமாக இருந்ததால் அவளுக்கு உதவிட முனையவில்லை இப்படிக் காயமடைந்தவர்கள் எவருமே உயிர்பிழைத்திட வழியேற்பட வில்லை. இவர்களுடன் வயதானவர்களும் குழந்தைகளும் கதறி அழுதார்களே தவிர எப்படித் தப்பிப்பது என்பது குறித்து சித்திக்க முடியாதளவிற்கு அதிர்ச்சியடைந்தவர்களாகவே காணப்பட்டனர் இவர்களுக்கு தப்பிப்பதற்கான வழிகள் கூட தெரிந்திருக்கவில்லை விபத்தில் தப்பியவர் றுக் கணக்கான உடல்கள் கடல் அலையில் மேலும், கீழும் தத்தளித்துக் கொண்டிருந்ததைக்கண்டேன் என்றார்.

கெலிகொப்ரர் மூலம் மீட்கப்பட்ட பால்பர்னிட் தான் மீட்கப்பட்டது குறித்து விபரிக்கையில் விபத்து நடந்த பரபரப்பில் என்னோடு சேர்ந்த 11 பேர் உயிர் காக்கும் படகில் குதித்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தோம் சுமார்ஏழு மணிநேரம்தவித்த பின்பே மீட்புப்படை கெலி

கப்பலின் கதவு திறந்ததால் தண்ணீர் உட்புகுந்து விபத்துக்குள்ளானது என்பதை பெரும்பாலான நிபுணர்கள் ஏற்க மறுக்கிறார்கள். 'ஹைடிராலிக்' முறையில் இயங்கும் கப்பலின் முன்புறக்கதவு தானாகத் திறந்தது என்பதும் நம்ப முடியாதது. யாராவது ஒருவர் கப்பல் புறப்பட்ட பின் கதவைத் திறந்து கவனக்குறைவாக சரியாக மூடாமல் விட்டிருக்கலாம். இதை கப்பல் மாலுமிகளில் யாராவது ஒருவர் தான் செய்திருக்க வேண்டும்.

தன்மை உடையதல்ல எனக் கூறியுள்ளார் நவீன காலத்தில் இதுமிகப் பெரும் விபத்து என சுவீடிஷ் பிரதமர் கார்ல் பில்ட் வர்ணித்துள்ளார் கப்பல் எதற்காக, எப்படி மூழ்கியது என்பதை உறுதியாக எவராலும் கணித்துக் கூற முடியவில்லை கப்பல் மூழ்கிய காரணத்தை கண்டறிய எஸ்தோனியா சுவீடன்: பின்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஜெர்மனியில் கட்டப்பட்ட 15.566 டன் நிறை கொண்ட இக்கப்பல் மூழ்கியதன் காரணத்தை கண்டறிய விசாரணைக்கு உத்தர விட்டுள்ளனர் இவ் உயர்மட்டக் குழு தமது தீவிர விசாரணையை ஆரம்பித்து விட்டது.

இருந்த போதிலும் இக் கப்பலை மீட்பது என்பது நடக்காத காரியம் என்றாலும் அதில் உள்ள முக்கிய சாதனங்களையும் கப்பலோடு மூழ்கிய நூற்றுக்கணக்கான சடலங்களையும் வெளியில் கொண்டுவர கப்பல் கம்பனி தீவிரமாக முயன்று வருகின்றது; முக்கிய சாதனங்களை ஆராய்ந்து குறைபாட்டைக் கண்டு பிடித்து அதை மீண்டும் ஏற்படாமல் செய்வதே இதன் நோக்கம். இது போன்ற கோர விபத்து இனி ஏற்படாமல் தடுக்க ஐரோப்பா கண்டத்து நாடுகள் விபத்துக்கான காரணத்தை அறிவதில் ஆர்வம் காட்டி நிற்கின்றன.

இது போன்ற சோகநிகழ்வு இனிமேலும் கடலில் நிகழ்ந்திடாமல் இருக்க 'எஸ்தோனியா' விபத்து ஒரு பாடமாக இருக்கட்டும்,

## காரிருள் வேளையில் கடும் குளிரில் நிகழ்ந்த விபரீதம்

நெஞ்சைப் பதற வைக்கும் இந்தக் கோர விபத்து நடந்து இன்று நள்ளிரவுடன் ஒருமாதத்தை தொட்டு நிற்கும் போதும் விபத்துக்கான சரியான காரணத்தை அறிந்து கொள்ள முடியாத நிலையிலேயே அதிகாரிகள் உள்ளனர்.

14ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனி நாட்டில் கட்டப்பட்ட 'எஸ்தொனியா' எனப் பெயர் சூட்டப்பட்ட இந்தக்கப்பல் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வந்தது. இது வாரத்திற்கு மூன்று முறை சுவீடனுக்கும் எஸ்தோனியாவிற்கும் பயணத்தை மேற்கொள்வது வழக்கம். சம்பவ தினமும் வழமை போல் இரவு 8-30 மணிக்கு எஸ்தோனியா தலைநகரான டல்லினிலிருந்து சுவீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமிற்கு புறப்பட்டுச் சென்றது.

அன்றைய தினமும் வழமை போல் இது புறப்படும் முன்னர் நிபுணர்கள் கப்பலை ஆராய்ந்து பயணத்திற்கு ஏற்றதாக மிக நல்ல நிலையில் உள்ளது என சான்றிதழும் வழங்கியிருந்தனர். நள்ளிரவு வரை சீராக சென்று கொண்டிருந்த கப்பலின் என்ஜின் ரூமில் இருந்த கம்பியூட்டர், கப்பலின் முன்பக்க கதவு வழியாக கடல் நீர் கப்பலிற்குள் புகுந்து கொண்டிருக்கிறது என்ற அபாய அறிவிப்பைக் கொடுத்த போது அதனை அங்கிருந்த மூன்று பொறியியலாளர்களில் ஒருவரான ஹென்ரிக் சில்லஸ்ட் அவதானித்தார். உடனடியாகவே இத்தகவலை மற்றைய இருவருக்கும் கொடுத்து விட்டு அவதானித்த போது வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது இதனால் மழை நீர்தான்

உயிர்காக்கும் உடை இருக்கும் தளத்தை நோக்கி ஓட ஆரம்பித்தனர்; அவ்வேளை கப்பல் முழுவதுமாக கடலில் மூழ்கிவிட்டது. அந்த இடைப்பட்ட ஒரு சிலநிமிடங்களில் உயிர்காக்கும் உடை, உயிர் காக்கும் படகு மூலம் உயிர் தப்பியவர்களைத் தவிர ஏனையோர் கப்பலோடு கடலில் மூழ்கிப் போயினர்;

மூழ்கிய கப்பலிலிருந்து தப்பித்துக் கொண்ட 'நீம் கைக்' என்பவர் சம்பவம் பற்றி விபரிக்கையில்:-

கப்பல் மூழ்குகிறது என்ற கூக்குரலைத் தொடர்ந்து உயிர்காக்கும் படகு இருக்கும் தளத்தை நோக்கி ஓடினேன். அங்கு உயிர் காக்கும் உடை அணிந்து கொண்ட நான், கப்பலில் இருந்து கடலில் மிதக்க விடப்பட்டிருந்த உயிர் காக்கும் ரப்பர் படகில் மேலும் மூவருடன்குதித்தேன் அப்போது கப்பலில் ஏற்பட்ட அவலக்குரல்களை நான்கண்டு கொள்ளவில்லை: என் உயிரைக்காப்பதில் நான்சுறுசுறுப்பாக இருந்தேன். ரப்பர் படகில் நாங்கள் குதித்த அடுத்தநொடியிலேயே கப்பல் ஒரு குலுக்கலோடு பக்கவாட்டாக சாய்ந்து கடலில் மூழ்கிவிட்டது'' என்றார்;

சுவீடன் நாட்டு பயணியான கென்ட்ஹோர்ஸ்டென், ''கப்பல் மூழ்குகிறது என்று கிடைத்த அறிவிப்பைத் தொடர்ந்து பயணிகள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கும் இங்குமாக ஓடினார்கள். இதன்போது ஏற்பட்ட நெருக்கடிகளாலும் கப்பல் நிலை கொள்ள முடியாமல் கடல்நீரில் தத்தளித்ததாலும் பலர் மயக்கமடைந்தனர்.

களில் பெரும்பாலோர் ஆண்கள் அதிலும் 20 வயதிலிருந்து 50 வயதிற்கு உட்பட்டவர்கள் வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் தப்பிப்பதற்கு முதலிடம் கொடுப்பது என்ற கொள்கைக்கே அங்கு இடமில்லாது போய்விட்டது என்றார் மிகுந்த வேதனையுடன். விபத்து நடந்தவுடன் மீட்புப் பணிக்காக 20 கப்பல்களும் 10 ஹெலிகொப்ரர்களும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்தன கடும் குளிரும் பலத்த மழையும் தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததினால் மீட்புப்பணியில் தாமதம் ஏற்பட்டதாக மிக்கோ மொன்டோனென் என்ற

தொகுப்பு

சசிகரன்

மீட்பு நிலைய அதிகாரி கூறினார் சம்பவம் நடைபெற்ற போது பால்டிக்கடலில் உறை நிலைக்குக் கீழ்ப்பட்ட வெப்பநிலை காணப்பட்டது இதனால் தப்பித்துக் கொள்ள கப்பலிலிருந்து கடலில் குதித்தவர்கள் கூட தப்பித்துக் கொள்ளும் சாத்தியம் இருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

மீட்புப்பணியில் ஈடுபட்ட கப்பல் கப்டன் டான்ரூஸ் கூறுகையில் உதவி கேட்டு அனுப்பும் 'எமர்யென்சி ராக்கெட்' உதவியுடன் விபத்து நடந்த இடத்தை அடையாளம்கண்டு நெருங்கி விட்ட போதிலும்

கொப்ரரின் கண்ணில்பட்டோம்இதற்கிடையில் பலத்த காயமடைந்த 6 பேர் மரணமடைந்து விட்டனர் என்னுடன் சேர்த்து ஐவர் உயிருடன் மீட்கப்பட்டோம். விபத்தின்போது எப்படியும் உயிர் வாழ வேண்டும் என்ற விடா முயற்சியாலேயே நான் கடலில் குதித்து படகில் ஏறியதால் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டேன் இல்லையேல் நானும் இறந்தவர்களில் ஒருவனாகி இருந்திருப்பேன் என்றார்.

விபத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் ஸ்டாக்ஹேம்சோருடர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் இவ்விபத்தின் போது சிக்கியவர்களில் 139 பேர்மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் இதுவரை 912 உடல்களும் மீட்கப்பட்டுள்ளன கப்பல் மூழ்கிய இடத்தில் தேடும்பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது: மீட்கப்பட்ட சடலங்கள் பெட்டிகளில் அடைக்கப்பட்டுபாதுகாக்கப்பட்டு வருவதுடன் அடையாளம் காணப்பட்டவை சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேற்படி மூழ்கிய கப்பல் கம்பனியின் நிர்வாகி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்

கப்பல் புறப்படும் போது நன்றாக ஆராய்ந்து மிகமிகப் பாதுகாப்பாக அனுப்பப்பட்டது: முன்பக்கக் கதவும் பிற கதவுகளும்தனிக்கவனம்செலுத்தப்பட்டு நல்ல முறையில் அடைக்கப்பட்டது கம்பியூட்டரின் அறிவிப்பை பொருட்படுத்தாது இருந்தமையே

மற்றும்படி கதவு தண்ணீர் அழுத்தினாலோ, புயல் வீசுவதாலோ திறப்பதற்கு வாய்ப்பில்லை என்கின்றனர்:

சுவீடன் நாட்டு நிபுணர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் ஏற்கனவே இந்தக்கப்பல் கம்பனியின் கப்பல்கள் பால்டிக் கடலில் செல்லும் போது இதேபோல் கதவு திறந்து தண்ணீர்புகுந்து விபத்து ஏற்படும் வாய்ப்பு 66 முறை தக்கநேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு தவிர்க்கப்பட்டுள்ளது இது வெளியில் தெரிய விடாமல் மறைக்கப்பட்டு உள்ளது. இந்தமுறை மோசமான வானிலை காரணமாக விபத்து ஏற்படப் போவதை மாலுமிகளால் கணிக்க இயலாமல் போய்விட்டது என்பதே உண்மை என்றார்.

ஆனால் கப்பல் கம்பனி பங்குதாரர்களில் ஒருவரான நார்த்ஸ்ட்ராம் இதை மறுப்பதோடு முழுவிசாரணையும் முடிந்த பிறகே கப்பல்மூழ்கியது பற்றி ஒரு இறுதி முடிவுக்கு வரமுடியும் உலகில் கடலில் மூழ்கிய எங்கள் கப்பல் போல் மேலும் 4.500 கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன: ஆதலால் மூழ்கிய கப்பல் பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளோம்; அதில் கிடைக்கும் முடிவைக் கொண்டு இதே வகையைச் சேர்ந்த மற்ற கப்பல்களின் பாதுகாப்பு ஏற்பாட்டை மேம்படுத்த முடியும் உயிர் காக்கும் படகு, உடைகள் அனைத்தும் தயார் நிலையில் போதுமானதாக இருந்தும் அதை பயன்படுத்த முடியாத விதத்தில் விபத்து சில நிமிடத்தில் ஏற்பட்டு முடிந்துவிட்ட

### 31. ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு

13-03-1965

உதிர்வு

27-09-1994

**திருமதி சாந்தி ஞானேந்திரன்**

அன்பின் திருவுருவாய்
அறிவின் சிகரமாய்
ஆற்றலில் வல்லவளாய்
அமைதியில் இமயமாய்

பார்ப்பதற்கு பலதிருக்க
பாதியிலே விட்டுவிட்டு
நாம் நினையா நாளினிலே
எம்மை விட்டேன் மறைந்தனையோ

உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!
உங்கள் பிரிவால் துயருறும்

சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்
பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி.

கணவன், பிள்ளைகள்
41065 MONCHENGLAD BACH
ROHR STR 8 A,
GERMANY

(9825)

ஆராய்ந்து பயணத்திற்கு ஏற்றதாக மிக நல்ல நிலையில் உள்ளது என சான்றிதழும் வழங்கியிருந்தனர். நள்ளிரவு வரை சீராக சென்று கொண்டிருந்த கப்பலின் என்ஜின் ரூமில் இருந்த கம்பியூட்டர், கப்பலின் முன்பக்க கதவு வழியாக கடல் நீர் கப்பலிற்குள் புகுந்து கொண்டிருக்கிறது என்ற அபாய அறிவிப்பைக் கொடுத்த போது அதனை அங்கிருந்த மூன்று பொறியியலாளர்களில் ஒருவரான ஹென்ரிக் சில்லஸ்ட் அவதானித்தார். உடனடியாகவே இத்தகவலை மற்றைய இருவருக்கும் கொடுத்து விட்டு அவதானித்த போது வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது இதனால் மழை நீர்தான் கப்பலினுள் புகுந்துவிட்டது என எண்ணியவர்கள் நீரை வெளியேற்ற மோட்டரை இயக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் அடுத்த ஒரு நிமிடத்தில் கப்பலில் கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேல் அவலக்குரல்களை நான்கண்டு கொள்ளவில்லை. என் உயிரைக்காப்பதில் நான்சுறுசுறுப்பாக இருந்தேன். ரப்பர் படகில் நாங்கள் குதித்த அடுத்தநொடியிலேயே கப்பல் ஒரு குலுக்கலோடு பக்கவாட்டாக சாய்ந்து கடலில் மூழ்கிவிட்டது'' என்றார்.

சுவிடன் நாட்டு பயணியான கென்ட்ஹோர்ஸ்டென், ''கப்பல் மூழ்குகிறது என்று கிடைத்த அறிவிப்பைத் தொடர்ந்து பயணிகள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கும் இங்குமாக ஓடினார்கள். இதன்போது ஏற்பட்ட நெருக்கடிகளாலும் கப்பல் நிலை கொள்ள முடியாமல் கடல்நீரில் தத்தளித்ததாலும் பலர் மயக்கமடைந்தனர். சிலர் கை, கால்கள் உடைந்த நிலையில் பிறரை உதவிக்கு அழைத்தனர் இப்படிக் கால் உடைந்த ஒரு பெண் தனக்கு உயிர்காக்கும்உடை வேண்டும் என மற்றவர்களிடம் மன்றாடிக் கொண்டிருந்தார் ஆனால் எல்லோரும் தத்தமது உயிர்களைக் காப்பாற்

மீட்பு நிலைய அதிகாரி கூறினார் சம்பவம் நடைபெற்ற போது பால்டிக்கடலில் உறை நிலைக்குக் கீழ்ப்பட்ட வெப்பநிலை காணப்பட்டது இதனால் தப்பித்துக் கொள்ள கப்பலிலிருந்து கடலில் குதித்தவர்கள் கூட தப்பித்துக் கொள்ளும் சாத்தியம் இருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

மீட்புப்பணியில் ஈடுபட்ட கப்பல் கப்டன் டான்ரூஸ் கூறுகையில் உதவி கேட்டு அனுப்பும் 'எமர்யென்சி ராக்கெட்' உதவியுடன் விபத்து நடந்த இடத்தை அடையாளம்கண்டு நெருங்கி விட்ட போதிலும் காலநிலை சீரற்று இருந்ததால் உயிர்காக்கும் படகில் மிதந்து கொண்டு உதவி கோரிய அனைவரையும் காப்பாற்ற முடியவில்லை கடும் போராட்டத்திற்குப்பின் 17 பேர்களை மட்டுமே என்னால் உயிருடன் மீட்க முடிந்தது அந்த நேரத்தில் நூற்

...மீட்கப்பட்ட சடலங்கள் பெட்டிகளில் அடைக்கப்பட்டுபாதுகாக்கப்பட்டு வருவதுடன் அடையாளம் காணப்பட்டவை சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேற்படி மூழ்கிய கப்பல் கம்பனியின் நிர்வாகி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்

கப்பல் புறப்படும் போது நன்றாக ஆராய்ந்து மிகமிகப் பாதுகாப்பாக அனுப்பப்பட்டது. முன்பக்கக் கதவும் பிறகதவுகளும்தனிக்கவனம்செலுத்தப்பட்டு நல்ல முறையில் அடைக்கப்பட்டது கம்பியூட்டரின் அறிவிப்பை பொருட்படுத்தாது இருந்தமையே விபத்திற்குக் காரணம் நீர்உட்புகுவதைக் கண்டதும் சரியான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பின் இந்தக் கோர விபத்தை தவிர்த்திருக்கலாம். இது முழுக்க முழுக்க கவனக் குறைவால் ஏற்பட்ட விபத்து என்றார்.

...யது பற்றி ஒரு இறுதி முடிவுக்கு வரமுடியும் உலகில் கடலில் மூழ்கிய எங்கள் கப்பல் போல மேலும் 4.500 கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன: ஆதலால் மூழ்கிய கப்பல் பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளோம்; அதில் கிடைக்கும் முடிவைக் கொண்டு இதே வகையைச் சேர்ந்த மற்ற கப்பல்களின் பாதுகாப்பு ஏற்பாட்டை மேம்படுத்த முடியும் உயிர் காக்கும் படகு, உடைகள் அனைத்தும் தயார் நிலையில் போதுமானதாக இருந்தும் அதை பயன்படுத்த முடியாத விதத்தில் விபத்து சில நிமிடத்தில் ஏற்பட்டு முடிந்துவிட்டதாலேயே உயிர்ச்சேதம் ஆயிரத்தை நெருங்கிவிட்டது என்றார் இது இவ்வாறுஇருக்க எஸ்தோனிய பிரதமர் மார்ட்லார் இந்தவிபத்தை 82 ஆண்டுகளுக்கு முன் மூழ்கிய 'டைட்டனிக்' கப்பலுடன் ஒப்பிட்டுள்ளதுடன் இத்தகைய கப்பல் இலகுவில் மூழ்கும்


நாம் நினையா நாளினிலே
எம்மை விட்டேன் மறைந்தனையோ

உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!
உங்கள் பிரிவால் துயருறும்

சகோதரிகள், கணவன், பிள்ளைகள்
உறவினர்கள், நண்பர்கள்

41065 MONCHENGLAD BACH
ROHR STR 8 A,
GERMANY

பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி.

(9825)


## காலம் எழுதிய

என்பதே என் விருப்பம்

தேசிய இனப்பிரச்சினையை விட வாழ்வின் ஏனைய அம்சங்களையும் பிரதிபலிக்கக் கூடிய கவிதைகளையும் வெளியிட வேண்டும் என்றார்.

இச்சமயம் திரு- யேசுராசா எழுந்து சோ. ப. கூறிய கருத்துடன் எனக்கு உடன்பாடு உண்டு- பொறுப்பாளரும் இதை ஏற்றுக் கொள்கின்றார்- ஒரு பரிமாணத்திற்கு முக்கியம் கொடுக்கும் அதேவேளை அதனுடைய பக்க அல்லது ஓரம் சார்ந்த பகுதிகளையும் வெளிப்படுத்த வேண்டும்-

இது கலைஞர்களைப் பொறுத்தது- பல் பரிமாணம் பதிவாக வேண்டும் என்பதே விருப்பம் என்றார்-

இராஜி சண்முகநாதன் கருத்துத் தெரிவிக்கையில் அனைத்துக் கவிதைகளும் பொறுக்கி எடுத்த முத்துக்கள் இத் தொகுப்பில் 13 பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கியிருப்பதை எண்ணி பெருமை கொள்கிறேன். இதே போல இன்னும் பல தொகுப்பு நூல்கள் வெளிவர வேண்டும் - நெஞ்சத்துஏக்கங்கள், வேதனைகள் கவிதைகளாகப் படைக்கப்பட அது வாய்ப்பளிக்கும் என்றார்.

பஞ்சாட்சரம் கருத்துத் தெரிவிக்கையில்,

வயதானவர்களின் மனப்பான்மை வக்கரித்துப் போனது. நான் என்னையும் சேர்த்தேசொல்கிறேன். நாம் பழைய வார்ப்புகள் இளம் பிஞ்சுகள் போராட்டத்துடனும் இன்றைய நிகழ்வுகளுடனும் நன்கு ஊறியவர்கள் அவர்கள் சிந்தனையில் உண்மை, நேர்மை இருக்கும், அவர்கள் எண்ணங்கள் வளர்க்கப்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 19 இளங்கவிஞர்கள் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர் இது வரவேற்கக் கூடியதே என்றார்-

இறுதியில் திரு- ரவி கருத்துத் தெரிவிக்கையில், சோ- பத்மநாதனின் அபிப்பிராயத்தையும் மற்றைய பலரின் அபிப்பிராயத்தையும் கருத்தில் எடுப்போம்;

இங்கு கருத்துச் சொல்ல வெட்கப்படுவோர், கடிதத்தில் தமது கருத்துக்களை தெரிவித்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம்-

தேசிய இனப் பிரச்சினை சம்பந்தப்பட்ட சிறுகதைத் தொகுப்பு வேலைகள் ஆரம்பித்திருக்கின்றோம் என்றார்-

பூரண திருப்தியுடன் அந்தக் கவிதை நெஞ்சங்கள் நாவலர் மண்டபத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தன- ''காலம் எழுதிய வரிகள்'' கைகளில் தவழ்ந்தது-


## போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- கொம்யூட்டர் றபர் சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின்,காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்;

(:) கொழும்பு கலைக்கூடம் (:)

(கொழும்பு ஸ்ருடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10462)


## சிறிமா பண்டாரநாயக்கா

ப்படுகின்றன, பிரேமதாசாவின் அரசியல் பின்னணி கட்சிக்குள் இருந்த வேறு தலைமை தாங்கக் கூடிய சக்திகள் என்பவை அவற்றுள் சிலவாகும்- இதனால் ஹேமாவின் அரசியல் பிரவேசம் பெரிதாகப் பரிணமிக்கவில்லை. அடிக்கடி தனது நிச்சயமற்ற போக்கை அவர் வெளிக் காட்டியவிதம் அவர் தனது நிலையைத் தானே தாழ்த்திக் கொண்டதை உணர்த்தியது-

இறுதியாக யாரும் எதிர் பார்க்காததும் ஏன் சிறிமா திசாநாயக்காவே எதிர்பார்த்திருக்க முடியாத வகையிலும் காமினி திசாநாயக்காவின் மரணம் அவருக்கு ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலையை தந்துள்ளது- காமினியின் அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி இறுதி அஸ்திரமாக அவரது மனைவியை ஜனாதிபதி தேர்தல் களத்தில் இறக்கியிருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. இதன் நோக்கம் அப்பட்டமான அனுதாப ஆதரவினை இயலுமான வகையில் பெற முயலுவதைத் தவிர வேறு வகையினதாக இருக்க முடியாது-

எப்படியிருப்பினும் இலங்கையில் ஆரம்பித்து இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் என தென்னாசியாவில் பரவிய இத்தேர்தல் உத்தி, இலங்கையில் மீண்டும் ஒருமுறை ஐக்கிய தேசியக் கட்சியினால் பரிசோதிக்கப்பட இருப்பது தெளிவாகத் தெரிகின்றது.


## வேலை வாய்ப்பு

''தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்''

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

விண்ணப்பதாரிகள்:-

1) 18 வயதுக்கு மேற்பட்டவராகவும்,
2) க.பொ.த (சாதாரணம்) தரத்தில் தமிழும், கணிதம், எண்கணிதம்/தூய கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் கூடியதாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது இதற்கு சமமான பரீட்சையொன்றில் சித்தியடைந்திருக்க வேண்டும். க. பொ. த. உயர் தரத்தில் பெற்ற பெறுபேறுகளும், வேலை முன் அனுபவமும் விசேட தகைமைகளாக கணிக்கப்படும்.
3) ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்;

விண்ணப்ப முடிவு திகதி:- 12 - 11 - 1994

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

பணிப்பாளர்,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தாவடி,
தமிழீழம்.

(சி-10587)

# காமினியின் இறுதி நாள்

காமினி திசாநாயக்கா கொழும்பு தொட்டலங்க (பாலத்துறை) குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட இறுதிநாளில் அவருடன் பிரசாரங்களில் கலந்துகொண்ட முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், அந்த இறுதி நாளைப் பற்றிக் கூறுகிறார்.



மழை புயல் காரணமாக சீரற்ற காலநிலை நிலவுகின்றது. எனவே இப்போது சொப்பரில் (ஹெலி) செல்ல முடியாது. இதில் இரவுநேர திசையறி கருவியும் இல்லை. மலைகளை இலக்காகவே கொண்டே அதற்கு சரிவாக செல்கின்றேன் என விமான ஓட்டி கூறியபோது, நான், தொட்டலங்க கூட்டத்துக்கு எப்படியேனும் செல்லவேண்டும். இது முக்கியமான கூட்டம். எது நடந்தாலும் நீ விமானத்தை ஓட்டு இவ்வாறு மறைந்த எதிர்க்கட்சித்தலைவரும்ஐ.தே கஜனாதிபதிவேட்பாளருமான காமினி திசாநாயக்கா கிராண்ட்பாஸ் தொட்டலங்க குண்டுவெடிப்பில் கொல்லப்படுவதற்கு சற்று முன்னதாக, தும்மலசூரியாவில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் விமான ஓட்டியை அவசரப்படுத்தினார்.

இந்தக் குண்டுவெடிப்பில் திசாநாயக்கா கொல்லப்படுவதற்கு முன்னர் தும்மலசூரியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றினார். அவர் கொல்லப்பட்ட தினமான ஞாயிறன்று, காலை.கோல்பேஸ் விமானப்படை மைதானத்திலிருந்து அவரது பிரயாணம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. முதலாவதாக கண்டி அஸ்கிரிய விகாரைக்கு சென்றார் பின்னர் தலாத்து ஓயாவிலும் பூஜாப்பிட்டியிலும் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றி விட்டு, தமது தங்கொல்லை வீட்டில் மதிய போசனத்தை அருந்தினார் அதன் பின்னர் இறுதிப் பிரயாணத்தை நோக்கிய பிரயாணத்தில், கிரியல்லை தேர்தல் தொகுதியிலும். பிங்கிரிய தேர்தல் தொகுதியிலும் உரையாற்ற புறப்பட்டார் பிங்கிரிய தொகுதிக்கு செல்லும்போது மாலை 5.45மணியிருக்கும் அந்தக் கூட்டம் மாலை 6.45 மணியளவில் முடிவடைந்தது.

எனினும் தனது ஒரே இலக்கான தொட்டலங்கா கூட்டத்துக்கு செல்வது அவரதுஒரே குறியாக இருந்தது. ஆனால் கொப்பருக்கு வந்தும் விமான ஓட்டி இப்போது எப்படிச் செல்வது காலநிலை மிகவும் மோசமான

பிரேமச்சந்திராவை தனது காரில் ஏற்றிக் கொண்டு ஒருமுறை கொள்ளுப்பிட்டியிலுள்ள தனது வீட்டுக்கு போய் வருவதாகவும், கண்டி மாவட்ட எம். பி காதரின் வீட்டுக்கு போகும்படி என்னை பணித்தார் தொட்டலங்க வரும் வழியில், காதரின் இல்லத்தில் இருவரும் தேநீர் அருந்தினோம் இருவரும் களைப்படைந்திருந்தபடியால் அந்தக் கூட்டத்திற்கு செல்ல வேண்டியதில்லை என காதர் என்னிடம் கூறினார். நான் எப்படியும் போவதென்றும், திசாநாயக்கா போகும்படி பணித்ததையும் கூறிய நான் அவரது வீட்டில் இருந்து புறப்பட்டேன் நான் வரும் வழியில் முன்னாள் தொழில், தொழில்பயிற்சி அமைச்சர் அபுசாலியின் வீட்டில் கூட்டமொன்று நடந்தது. அங்கு இறங்கினேன் ஆனால் அங்கு அவரைக் காணவில்லை வீட்டாட்களுடன் கதைத்து விட்டு வெளியே வந்து பார்த்தபோது நான் வந்த கார் திரும்பிப் போய்விட்டது சாரதி என்னை கொண்டு வந்து விடுவதற்குத்தான் என நினைத்து இறக்கி விட்டுப் போய்விட்டார்நானும் விடயத்தை சொல்ல மறந்து விட்டேன் இதற்கிடையில், சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு தொலைபேசி மூலம் செய்தியை அனுப்பிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன் எனக்கு மீண்டும் அந்த கூட்டத்திற்கு செல்வதற்கு முடியவில்லை பதிலாக நள்ளிரவு 2 மணியளவில் மேற்படி துர்ப்பாக்கிய சம்பவம் நடைபெற்றதாகவும், அவர்கள் என்னைத் தேடும் படலத்தை ஆரம்பித்து நானிருந்த அந்த வீட்டுக்கு வந்தார்கள் நானும் அந்த கூட்டத்திற்கு போயிருந்தால் நிச்சயம் கொல்லப்பட்டிருப்பேன்

இதன் பிற்பாடு, இறுதிநேரச்சம்பவமாக ஐலண்ட் பத்திரிகை பின்வருமாறு தெரிவிக்கின்றது.

தொட்டலங்கா கூட்டத்திற்கு தனது கொள்ளுப்பிட்டி வீட்டிலிருந்து காமினி திசாநாயக்கா புறப்பட்டுச் சென்றார் தொட்டலங்காவில், பிரசார மேடையில் 30 நிமிடங்கள் பேசினார். பின் அவர், மேடையின் முன்பகுதிக்கு வந்து கூடியிருந்த மக்களுக்கு காலை வணக்கம் கூறினார் கூட்டம் நடைபெற்ற மேடையின் பல பாகங்களிலும் வாண வேடிக்கைகள் கிளம்பின இது வழமைக்கு மாறானதாக இருந்தது அந்த நேரத்தில் திடீரென பெரும் வெடிச்சத்தம் கேட்டது. மேடையில் நின்றிருந்த காமினி உட்பட, மேடைக்கு முன்னால் நின்றிருந்த நூற்றுக்கணக்கானோர் நிலத்தில் வீழ்ந்தனர் காமினியின் மார்பிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. மேடைக்கு ஓடி வந்த சில ஆதரவாளர்களும் மெய்க்காப்பாளர்களும் காமினியை தூக்கிக் கொண்டு அவரது காருக்குள் கொண்டு சென்றனர். கார் உடனடியாக கொழும்பு பொது வைத்தியசாலையின் விபத்து சிகிச்சைப் பிரிவை நோக்கிப் பறந்தது அங்கிருந்த வைத்தியர்கள் குறைந்து கொண்டிருந்த இதயத்துடிப்பை அதிகரிக்க காமினிக்கு இதயத்தை மசாஜ் செய்ய ஆரம்பித்தனர். எனினும் காமினியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

குண்டு வெடித்த சமயம் மேடையிலிருந்த சுனில்கொஸ்வத்த என்ற ஆதரவாளர் கூறுகையில், காமினிக்காக சுடுதண்ணீர் போத்தலொன்றில் வீட்டிலிருந்து தயாரித்த தேநீரை கொண்டுவந்திருந்தேன் காமினி பேசமுன்பு என்னிடம் கோப்பி தரு

# காமினி திசாநாயக்காவின் மரணம்

## ஐ.தே.கவில் ஏற்படுத்திய வெற்றிடம்

சிறிலங்கா அரசியலைப் பொறுத்து கடந்த சில ஆண்டுகள் பெரும் ஏற்ற இறக்கங்களையும் அதிர்ச்சி தரும் சம்பவங்களையும், கொண்டதாகவே இருந்து வருகின்றது. இந்த வகையில் இறுதியாக கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா சொல்லப்பட்டமை சேர்ந்துள்ளது.

காமினி திசாநாயக்காவின் மரணமானது சிறிலங்கா அரசியலைப் பொறுத்து. இன்று ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்துகின்றதா என்பதற்கு பதில் காண்பதில் சில சிரமங்கள், கருத்து முரண்பாடுகள் இருப்பினும் கூட, ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து இது ஒரு வெற்றிடத்தை நிச்சயமாக ஏற்படுத்தப் போகின்றது என்பதில் கருத்து முரண்பாடுகளுக்கு இடமில்லை என்றே கூறலாம்.

கடந்த ஆண்டு மே தினத்தன்று பிரேமதாசா கொல்லப்பட்டபோதே ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைமைப் பதவி யாருக்கு என்ற கேள்வி பலமாகவே கேட்கத் தொடங்கியது. ஆயினும் கட்சிக்குள் மோதல்கள், முரண்பாடுகள், பிரிவுகள் ஏற்படக் கூடாது என்ற நிலையிலும், அரசியல் யாப்பை அனுசரித்தும் டி. பி. விஜேதுங்காவிற்கு கட்சித் தலைமைப் பதவியும், ஜனாதிபதி பதவியும் கிடைத்தது

இது ஒரு வகையில் கட்சிக்குள் இருந்தவர்களின் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்

விஜேதுங்கா இதில் தோல்வி கண்டார்- இதனை அவரும் ஏற்றும் கொண்டார் இதன் காரணமாக அரசியல் ஓய்வு குறித்தும் அவர் சிந்திக்கத் தொடங்கினார்-

ஆனால் பின்னர் டி. பி. விஜேதுங்காவினால் மீண்டும் ஐ தே. கவிற்குள் கொண்டு வரப்பட்ட காமினி திசாநாயக்கா அவ்வாறானவரல்ல, கட்சித் தலைமைப் பதவிக்கும் அதிலிருந்து நாட்டின் தலைமைப் பதவிக்கும் உயர வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர். அதற்காக அவர் எந்த வழியையும் தேர்ந்தெடுக்கவும் அவர் தயாராகவே இருந்தார் என்பதை அவரது கடந்தகால நடவடிக்கைகள் தெளிவாகவே உணர்த்துவதாக இருந்தது.

காமினி திசாநாயக்காவின் குடும்பத்திற்கு ஓர் அரசியல் பின்னணி இருப்பினும், காமினி திசாநாயக்கா ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சிஷ்யப்பிள்ளையாகவே வளர்ந்தவராவார். ஆகையினால் அரசியலில் அவரைப்போன்றே ஆட்சி பீடத்தை பிடிப்பதற்கு எதையும் செய்வதற்கு தயாராகவே இருந்தவர்.

இதன் வெளிப்பாடாகவே யாழ் மாவட்டத்தில் 1981 மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் அவரின் பங்களிப்பு இருந்தது. ஆயுதப் படையின் உதவியுடன் மோசடி மூலம், தேர்தல் முடிவுகளை மாற்றம் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி உலகம் அறிந்ததாகவே இருந்தது.

> காமினி திசாநாயக்கா தனது அரசியற் குறிக்கோளை எய்த அவர் எதையும் செய்யத் தயாராக இருந்தார். அவரது அரசியற் பாதையில் நட்பும் இல்லை பகையுமில்லை என்பது மட்டுமல்ல கண்ணியமும். நேர்மையும் கூட இருக்கவில்லை.

ஐ.தே.கவிற்கு எதிராகச் செயற்பட்டார், அக்காலத்தில் தொண்டமானுக்கு இவர் சூட்டாதபுகழாரமே புகழ் இல்லை எனலாம்.

இந்த வகையிலேயே ஐ. தே.கவிற்குள் காமினி திசாநாயக்கா முனைப்பாகச் செயற்பட்டார் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வி கண்ட போதும் எவ்வாறாவது அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார் ஆனால் அம்முயற்சியில் அவர் தோல்வி கண்டாலும் மறைமுகமான தொரு வெற்றியைத் தேடிக் கொண்டார்.

அதுவே காமினி திசாநாயக்காவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவர் பதவியையும் எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் தேடிக் கொடுத்தது. வீழ்ச்சிப் பாதையில் செல்லும் கட்சிக்கு எதிர்த்துப் போராடக் கூடிய தொரு தலைமை தேவை என்பதும் அதற்கு காமினி தலைமை தாங்க கூடியவர் என்பதும் ஐ தே. க வினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது

இந்நிலையிலேயே ஐ. தே க. வின் மரபின்படி ரணில் விக்கிரமசிங்காவிற்குச் செல்ல வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் கட்சியின் பிரதித் தலைவர் பதவியும் அதைத் தொடர்ந்து ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலையும் காமினியைச் சென்றடைந்தது

இந்நிலையானது, பிரேமதாசா கொல்லப்பட்டதும், ஐக்கிய தேசியகட்சியின்தலைமைத்துவத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை காமினி ஒரு வகையில் நிரப்பினார் என்றே கூறமுடியும். இந்தவகை

நாயக்கா ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவான பின்னர் பிரேமதாசாவின் ஆதரவு வாக்குகளைத் தேட முற்பட்டார் ஹேமா பிரேமதாசாவை வீட்டிற்குச் சென்று சந்தித்து சமரசம் செய்ததோடு, பிரேமதாசாவுக்கு புகழாரம் சூட்டவும் முற்பட்டார்.

இதன் உச்சகட்டமே பிரேமதாசா சிலைக்கு அவர் மலர் மாலை அணிந்தமையும் அதற்காக தான் பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்றுகூறியமையுமாகும். இந்த வகையில் தென்னாசிய அரசியற் தலைவர்களுக்குரிய சகலகுண அம்சங்களையும்காமினி நிறையவே பெற்றிருந்தார் என்றே கூறலாம்.

இந்தவகையில், காமினி திசாநாயக்காவின் மரணமானது ஐ தே. கவைப் பொறுத்து அதன் தலைமைப்பீடத்தில் ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில் காமினி திசாநாயக்காவின் மரணத்தின் பின்னாவது ரணில் விக்கிரமசிங்கா ஐ தே.கட்சிக்கு தலைமை தாங்கி ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிற்க முயற்சித்திருக்க வேண்டும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கா அவ்வாறு தனது தலைமையை உறுதிப்படுத்தியதாக தெரியவில்லை. காமினியின் மனைவி சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றமை இதனையேவெளிப்படுத்துகின்றது இது ரணில் விக்கிரமசிங்கா எவையும் தன்னைத்

> பிரேமதாசாவிற்குப் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை டி, பி. விஜேதுங்காவினால் நிவர்த்திக்க முடியவில்லை. ஆனால் காமினி திசாநாயக்கா மேற்கொண்ட நடவடிக்கை அவரால் அவ் வெற்றிடம் நிரப்பப்படலாம் என்ற நம்பிக்கையை ஓரளவிற்கு ஏற்படுத்தத் தொடங்கியது.

காலை. கோல்பேஸ் விமானப்படை மைதானத்திலிருந்து அவரது பிரயாணம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. முதலாவதாக கண்டி அஸ்கிரிய விகாரைக்கு சென்றார் பின்னர் தலாத்து ஓயாவிலும் பூஜாப்பிட்டியிலும் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றி விட்டு, தமது தங்கொல்லை வீட்டில் மதிய போசனத்தை அருந்தினார் அதன் பின்னர் இறுதிப் பிரயாணத்தை நோக்கிய பிரயாணத்தில், கிரியல்லை தேர்தல் தொகுதியிலும். பிங்கிரிய தேர்தல் தொகுதியிலும் உரையாற்ற புறப்பட்டார் பிங்கிரிய தொகுதிக்கு செல்லும்போது மாலை 5.45மணியிருக்கும் அந்தக் கூட்டம் மாலை 6.45 மணியளவில் முடிவடைந்தது.

எனினும் தனது ஓரே இலக்கான தொட்டலங்கா கூட்டத்துக்கு செல்வது அவரதுஒரே குறியாக இருந்தது. ஆனால் கொப்பருக்கு வந்தும் விமான ஓட்டி இப்போது எப்படிச் செல்வது காலநிலல மிகவும் மோசமான நிலையிலுள்ளது. விமானப்பாதை சீராகத் தெரியவில்லை என்றார். விமான ஓட்டியை பார்த்து, நாம் எந்த வழியிலும் அங்கு செல்ல வேண்டும். அங்கு எனக்காக காத்திருப்பார்கள் நீ என்ன நடந்தாலும் ஹெலிக்கொப்டர் செலுத்தத்தான் வேண்டும் என்று திசாநாயக்கா பணித்தார்.

அப்போது, விமலசூரியவில் வைத்து ஜி.எம்.பிறேமச்சந்திராவையும் தன்னோடு இணைத்துக் கொண்டு மேற்படி கூட்டத்துக்கு அவர் வரத்தயாராயிருந்தார் அதே நேரம் விமான ஓட்டி அண்மையிலிருந்த பொலிஸ் நிலையத்துக்கு சென்று பெற்றுக் கொண்ட தகவலின்படி அதே இடம் நோக்கி ஹெலியை செலுத்தினார் கொழும்பைஅடையலாம் என்று விமானக் கட்டுபாட்டு நிலையம் அவருக்கு அறிவுரை வழங்கியது.

அதன்படி 7-30 மணியளவில் கொழும்பை நோக்கிய பிரயாணம் ஆரம்பமாகியது இரவு 8.45 மணியளவில் மீண்டும் அந்த சொப்பர் (ஹெலி) கோல்பேஸ் விமான தளத்தை அடைந்தது. அங்கு வந்திறங்கிய திசாநாயக்கா, ஜி. எம்.

உட்பட, மேடைக்கு முன்னால் நின்றிருந்த நூற்றுக்கணக்கானோர் நிலத்தில் வீழ்ந்தனர் காமினியின் மார்பிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. மேடைக்கு ஒடி வந்த சில ஆதரவாளர்களும் மெய்க்காப்பாளர்களும் காமினியை தூக்கிக் கொண்டு அவரது காருக்குள் கொண்டு சென்றனர். கார் உடனடியாக கொழும்பு பொது வைத்தியசாலையின் விபத்து சிகிச்சைப் பிரிவை நோக்கிப் பறந்தது அங்கிருந்த வைத்தியர்கள் குறைந்து கொண்டிருந்த இதயத்துடிப்பை அதிகரிக்க காமினிக்கு இதயத்தை மசாஜ் செய்ய ஆரம்பித்தனர். எனினும் காமினியின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

குண்டு வெடித்த சமயம் மேடையிலிருந்த சுனில்கொஸ்வத்த என்ற ஆதரவாளர் கூறுகையில், காமினிக்காக சுடுதண்ணீர் போத்தலொன்றில் வீட்டிலிருந்து தயாரித்த தேநீரை கொண்டுவந்திருந்தேன் காமினி பேசமுன்பு என்னிடம் கோப்பி தருமாறு கேட்டார். நான், காமினியிடம் வீட்டிலிருந்து தேநீர் கொண்டுவந்திருப்பதாக கூறினேன் மேடையின் 3வது வரிசையிலிருந்து ஒரு கப் தேநீரை அவருக்கு கொடுத்தேன். அவர் பேசி முடிந்ததும் வழமையைவிட வாணவேடிக்கைகள் கொளுத்தப்பட்டன. மேடையின் முன்பகுதிக்கு சென்று காமினி மக்களுக்கு காலை வணக்கம் கூறிய போது வெடிகுண்கு வெடித்தது. எனக்கு மார்பிலும் கண்ணிலும் காயமேற்பட்டது எனக் கூறினார்.

இன்னொரு ஆதரவாளரான நிமால் பெரேரா கூறுகையில், குண்டு வெடித்ததும் நானும் சிலரும் சேர்ந்து அவரை தூக்கினோம், நான் அவரது காலைப் பிடித்திருந்தேன். அந்த நேரத்தில் கூட்டத்திலிருந்தவர்கள் விழுந்தவர்களின் மேலாக பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தனர், வைத்தியசாலையில் காமினியின் மனைவிக்கு சொல்லியனுப்பப்பட்டது. அவரை சத்திர சிகிச்சை அறைக்கு வெளியே காத்திருக்குமாறு வைத்திய நிபுணர்கள் கூறினர் காமினியின் இதயத்தை மீள இயக்குவிக்க பல வைத்தியர்கள் முயன்று கொண்டிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே தினத்தன்று பிரேமதாசா கொல்லப்பட்டபோதே ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைமைப் பதவி யாருக்கு என்ற கேள்வி பலமாகவே கேட்கத் தொடங்கியது. ஆயினும் கட்சிக்குள் மோதல்கள், முரண்பாடுகள், பிரிவுகள் ஏற்படக் கூடாது என்ற நிலையிலும், அரசியல் யாப்பை அனுசரித்தும் டி. பி. விஜேதுங்காவிற்கு கட்சித் தலைமைப் பதவியும், ஜனாதிபதி பதவியும் கிடைத்தது

இது ஒரு வகையில் கட்சிக்குள் இருந்தவர்களின் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பனவற்றின் அடிப்படையில் நிகழ்ந்ததாகவே விமர்சிக்கப்பட்டது ஆனால் இதற்கு கட்சிக்குத் தலைமை தாங்கக் கூடியதாகக் கருதப்பட்ட ரணில் விக்கிரம சிங்காவின் தலைமைத்துவ ஆற்றல் இன்மை காரணமாக இருக்குமா என்று இன்று எண்ண வைக்கின்றது.

இதே சமயம் நீண்டகாலமாக ஜே ஆர் ஜெயவர்தனா, ஆர். பிரேமதாசா போன்ற பலமான தலைமைகளினால் கட்டிக்காக்கப்பட்டு வந்த ஐ-தே-கவை டி பி- விஜேதுங்காவால் வெற்றிகரமாக வழிநடத்திச் செல்ல முடியவில்லை சுமார் ஒருவருடகாலத்திற்குள்ளேயே டி-பி-

காமினி திசாநாயக்கா ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சிஷ்யப்பிள்ளையாகவே வளர்ந்தவராவார். ஆகையினால் அரசியலில் அவரைப்போன்றே ஆட்சி பீடத்தை பிடிப்பதற்கு எதையும் செய்வதற்கு தயாராகவே இருந்தவர்.

இதன் வெளிப்பாடாகவே யழ் மாவட்டத்தில் 1981 மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் அவரின் பங்களிப்பு இருந்தது. ஆயுதப் படையின் உதவியுடன் மோசடி மூலம், தேர்தல் முடிவுகளை மாற்றம் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி உலகம் அறிந்ததாகவே இருந்தது.

இதேசமயம், அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அவர் எவருடனும் கூட்டு வைத்துக் கொள்ளவும் தயாராகவும் இருந்தார். பிரேமதாசாவினால் ஓரங்கட்டப்பட்டபோது, லலித்துடன் இணைந்து கட்சியைவிட்டு வெளியேறினார். பிரேமதாசா மீது குற்றவியல் பிரேரணைகொண்டு வருவதிலும் முனைப்பாக இருந்தார்.

இதனை வெளிப்படுத்த அவரது அரசியல் வாழ்வில் நிறையவேசம்பவங்கள் உண்டு அமைச்சர் தொண்டமானை, 'நாயில்உள்ளஒரு ஓட்டுண்ணி' என ஒருசமயம் வர்ணித்த காமினி திசாநயக்கா, பின்னர் மத்திய மாகாண சபை அரசாங்கத்தை கலைப்பதற்கு தொண்டமானுடன்இணைந்து

நிலையும் காமினியைச் சென்றடைந்தது

> பிரேமதாசாவிற்குப் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை டி, பி. விஜேதுங்காவினால் நிவர்த்திக்க முடியவில்லை. ஆனால் காமினி திசாநாயக்கா மேற்கொண்ட நடவடிக்கை அவரால் அவ் வெற்றிடம் நிரப்பப்படலாம் என்ற நம்பிக்கையை ஓரளவிற்கு ஏற்படுத்தத் தொடங்கியது.

இந்நிலையானது. பிரேமதாசா கொல்லப்பட்டதும், ஐக்கிய தேசியகட்சியின்தலைமைத்துவத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை காமினி ஒரு வகையில் நிரப்பினார் என்றே கூறமுடியும். இந்தவகையில் டி.பி விஜேதுங்கா ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரால் ஐ.தே கவிற்கு வழங்க முடியாது போன தலைமைத்துவம் காமினியினால் வழங்கப்பட்டதெனலாம்]

ஆனால், காமினி திசாநாயக்காவின் அரசியல் சித்தாந்தத்தில் நட்பு, பகை என்பது மட்டுமல்ல. நேர்மை, கண்ணியம் என்பவையும் இருந்ததாக இல்லை ல காமினி திசாநாயக்கா தனது அதிகாரத்தைக் கைப்பற்றும் குறிக்கோளுக்காக எதையும் செய்யத் தயாராகவே இருந்தார்.

இதன் வெளிப்பாடே பிரேமதாசா குடும்பத்துடன் அவர் செய்து கொண்ட சமரசமாகும். பிரேமதாசா மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கட்சியைவிட்டு வெளியேறிச் சென்ற காமினி திசா

தொியவில்லை. காமினியின் மனைவி சிறிமா திசாநாயக்கா

ஜனாதிபதி வேட்பாளராக ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றமை இதனையேவெளிப்படுத்துகின்றது இது ரணில் விக்கிரமசிங்கா எதையும் தன்னைத் தேடிவந்தால் வரட்டும் அல்லது போகட்டும் என்ற மனப்பான்மையில் இருப்பதாகவே எண்ணவைக்கின்றது.

இது ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்த தலைமை என எதிர்பார்க்கப்படும் ரணிலின் தலைமையின் மீது நம்பிக்கையீனத்தையே பலருக்கு ஏற்படுத்தக்கூடும். போராடத் துணியாத தலைமையினால் சூழ்ச்சிகள், சதிகள், பேரம்பேசுதல்கள் நம்பிக்கைத் துரோகங்கள் நிறைந்த அரசியலில் தாக்குப்பிடிப்பது சிரமமே. இந்தவகையில் காமினியின் இழப்பானது ஐ. தே கவிற்கு பெரும்இழப்பு என்றேசொல்லலாம்.

ஜெயராஜ்

---

# கச்சதீவை கபளீகரம்

மாகக் கச்சதீவு தொடர்பான புதிய நிலைப்பாட்டை இந்தியா முன்னெடுக்க வேண்டியதாயிற்று.

## இந்தியாவின் நிலைப்பாடும் வடபகுதி மீனவர்களின் எதிர்காலமும்.

1974-ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி கச்சதீவுப் பகுதியில் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க இந்தியா, இலங்கை அரசினை வற்புறுத்தி வருகின்றது. வரலாற்று ரீதியான ஆதாரங்களை மீண்டும் கிளப்பி கச்சதீவினையும் அதன் கடற்பகுதியினையும் மீண்டும் கைப்பற்றிக்கொள்ள முனைகின்றது. பேராசிரியர் வி.சூரியநாராயணன் என்பார் ''வரலாற்று ரீதியாக இராமநாதபுரஜமீந்தார் ஆட்சியில், கச்சதீவு ராமநாதபுர ராஜாவின் (Raja of Ramnad) கீழ் இருந்ததாக பல ஆவணங்களை ஆதாரம் காட்டியுள்ளார். சர்வதேச சட்டப் பேராசிரியர் T S.ராமராவ் ''இலங்கையானது கச்சதீவை நிர்வாகம் செய்வதற்கான எந்த ஒரு சான்றினையும் தாம் அறிந்த வரையில் இல்லை என்றும் 1947-ல் ஜமீந்தார் ஒழிப்புச் சட்டத்தின பின் கச்சதீவுதமிழ் நாட்டு அரசுக்குரியதாயிற்று'' என்று கூறுகின்றார் அத்துடன் ''வெற்றி கொள்வதற்கான உறுதியான ஆதாரம் இந்தியாவுக்கு இருந்தும் வன்மம் பாராட்டாது 1974-ல் இதனை இலங்கைக்கு நட்பு ரீதியாக கையளித்தது'' என்றும்

எல்லைகளை வரைந்தபோது டில்லி அரசு சமஅளவு தூரத்தை கணிப்பில் எடுத்துக்கொள்ளவில்லை எனவும் கச்சதீவு இலங்கையின் பக்கம் போகக்கூடியவாறு எல்லை வரையப்பட்டன என்றும் கூறுகிறார்.

இந்திய கடற்படை அதிகாரியான திரு. கார் நெஸ்ரோ என்பார் கருத்துத் தெரிவிக்கையில் 1974 ம் ஆண்டு ஒப்பந்த 5 வது சரத்து இரு நாட்டு மீனவர்களும் கச்சதீவுப் பிராந்தியத்தில் மீன்பிடிக்க அனுமதியுண்டு எனக் கூறுகிறது எனவும், 1976 ஒப்பந்தப்படி மன்னார் வளைகுடாவிலும் வங்காளவிரிகுடாவிலுமே அனுமதியின்றி ஒருநாட்டின் எல்லைக்குள் மற்றநாடு மீன்பிடித் தொழில் செய்யமுடியாது எனக் கூறுகிறது" என்றும் கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை நோக்கும்போது கச்சதீவுப் பகுதியில் தொடர்ந்தும் இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்ற போக்கினையே காட்டி நிற்கின்றது.

கச்சதீவுப் பகுதியின் கடல்வள முக்கியத்துவம் கருதி கச்சதீவு பகுதியினை இந்தியாவுக்கு விட்டுத்தர வேண்டுமெனவும், பதிலாக இந்தியாவுக்கு உரித்தான 'வோட்ஜ்' (Wadge) மீன்பிடி மேடையில் இலங்கை மீனவருக்கு அனுமதி வழங்கலாம் எனவும் இந்திய தரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டும் உள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ''தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்க இலங்கையிடமிருந்து கச்சதீவை காலவரையறையற்ற குத்தகைக்கு பெற்றுத்தர வேண்டும்'' எனக்கூறியுள்ளார், இதனைப் பெற்று விட்டால் அத் தீவைச் சுற்றியுள்ள கடல் நீரில் மீன்பிடிக்கும் உரிமை இயற்கையாக இந்திய மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும்கிடைத்துவிடும்என்பது உறுதி எனவும் இலங்கையிலுள்ள அரசியல் தலைமை மாற்றத்தை பயன்படுத்தி மத்திய அரசு மிகவிரைவில் இப்பணியைச் செய்யவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார் (தினத்தந்தி செப் 94)

கச்சதீவுப் பகுதியில் இந்தியாவின் கவனம் திரும்பியுள்ளமைக்குக் காரணம் அப்பகுதியின் சிறந்த கடல் வளத்தின் முக்கியத்துவமேயாகும், பெருந்தொகையான அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற இறால், கடலட்டைபோன்றனமிகுந்துகாணப்படுவதும் பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் இக் கடற்பகுதியை நம்பி வாழ்வதும் இப்பகுதியில் கவனம் திரும்பியமைக்குரியகாரணங்களாகவுள்ளன.

### வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்

இந்தியாவினால் கச்சதீவுப் பகுதியானது குத்தகைக்குப் பெறப்படுமானால் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு என்றுமில்லாதவாறு மிக மோசமானதாகவே அமையும் கடந்த காலங்களில் இந்தியமீன்பிடி ரோலர்கள் பேசாலை, நெடுந்தீவு, பாலைதீவு ஆகிய பகுதிகள் வரையிலும் சென்று மீன் வளங்களைச் சுரண்டிச் சென்றதுடன் வடபகுதி மீனவர்களின் மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்தியும் களவாடியும் சென்றுள்ளனர். இப்பகுதியில் தொடர்ந்தும் தமது ஆக்கிரமிப்பைச் செய்வார்களாயின் சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவர். இப்பகுதி மீன்பிடி மூலம் கிடைக்கும் அந்நியச் செலவணி சம்பாத்தியமும் பெரும் பாதிப்புக்குள்ளாகும்

வடபகுதியைச் சேர்ந்த மன்னார் தீவுப்பகுதி, யாழ்-மேற்குக்கரையோரம் யாழ்ப்பாண தீவுப்பகுதிகள் . பூநகரி, விடத்தல்தீவு, நாச்சிக்குடா, போன்ற பகுதியில் உள்ள மீனவர்களுக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று கரையிலிருந்து 200 மைல் தூரம் வரையிலான கடற்பரப்பு கிடையாது. அத்துடன் இப்பகுதியிலிருந்து வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்வதும் சாத்தியமற்றது. இந் நிலையில் குறுகிய பாக்குநீரிணைப் பகுதியேமிக முக்கியமான தளமாக உள்ளது இந்நிலையில் தனது கடல்எல்லையுடன் இந்தியா நில்லாது கச்சதீவு கடற் பகுதியிலும் இலங்கையின் எல்லைக்குட்பட்ட பகுதியையும் பயன்படுத்த முற்படுவது ஒருவகையில் ஆக்கிரமிப்பு முயற்சியாகவே கொள்ளலாம்.

இந்தியா கோருவது போன்று கச்சதீவுப் பகுதியை சிறிலங்கா அரசு குத்தகைக்கோ அல்லது விட்டுக்கொடுப்போசெய்யாதுஎனக்கூறிவிடுவதற்கில்லைஏனெனில் இக்கடற் பிராந்தியத்தின் முழுமையான பயன்பாடும் வடபகுதி தமிழ் மீனவர்களுக்கே உரியதாகும். ஏற்கனவே கடல் தடைச் சட்டம் போட்டு அப்பாவி மீனவர்களை கொடுமைப்படுத்தும்சிறிலங்கா அரசு கச்சதீவுப் பகுதியை இந்தியாவுக்கு விட்டுக்கொடுத்தால் அது ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை இதன்மூலம் தமிழக மீனவர்களையும் வடபகுதி தமிழ் மீனவர்க

( 2ஆம் பக்கம் பார்க்க )

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதில்லை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வடக்கின் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலேயே நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்துள்ளார்-

அண்மையில் கட்சிகளின் வேட்பாளர்களையும், பிரதிநிதிகளையும் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்-

இக் கூட்டத்தில், இராணுவம் அல்லது பொலிசாரின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் தேர்தலை வைப்பதற்கு ஐ-தே-க- பிரதிநிதிகள் குழு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் தெரியவருகின்றது-

அரச இயந்திரம் பூரணமாக இயங்காத நிலையிலும் வடக்கில் புலிகள் தங்கள் பகுதிகளில் தேர்தலை நடத்த சம்மதம் தராத நிலையிலும் இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் சந்திரானந்த டீ சில்வா மேலும் தெரிவித்துள்ளார்-

## ஜனாதிபதி தேர்தலிலிருந்து ஜே.வி.பி.வேட்பாளர் விலகல்

(கொழும்பு)

ஜனதா விமுக்தி பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பதி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து வாபஸ் பெற்றுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணி வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து தமது கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுவின் தீர்மானத்திற்கு அமையத் தான் வாபஸ் பெறுவதாக திரு நிஹால் கலப்பதி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பாக பிரதமர் தீர்க்கமான ஒரு வாக்குறுதியைத் தந்தால் தான் ஜனாதிபதித் தேர்தலிலிருந்து விலகிக்கொள்வதாக நிஹால் கலப்பதி முன்னர் அறிவித்திருந்தார்,

## சவுக்கு நடுகைத் திட்டம் வைபவரீதியாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மணற்காட்டுப் பகுதியில் நேற்றுக்காலை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு சூசை அவர்களினால் 200 ஏக்கர் சவுக்கு மரம் நடுகைத் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத் திட்டத்துடன் சேர்த்து 50 ஏக்கர் தென்னங்கன்று நடுகைத் திட்டத்தினையும் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

மணற்காட்டுப் பகுதி சூழல் பாதுகாப்பு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 200 ஏக்கர்சவுக்கு, 50ஏக்கர் தென்னங்கன்று நடுகைத் திட்ட நிகழ்வு நேற்றுக்காலை மணற்காட்டுப் பகுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பகுதி பொதுமுகாமையாளர் மு. உமைநேசன் (சஞ்சை) அவர்கள் தலைமை தாங்கினார்.

இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கை யாழ் மாவட்ட பதில் அரச அதிபர் திருமதி பத்தினியம்மா அவர்கள் ஏற்றி வைத்தார்.

தலைமை உரையினைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு வி. செம்பியன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். இதனை அடுத்து யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக மரம் நடுகை நிகழ்வு நடைபெற்றது. முதலில் சவுக்கு மர நடுகையும் அடுத்து தென்னங்கன்று நடுகையும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் அரச உயர் அதிகாரிகளும் பெருமளவு பொதுமக்களும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர். (பா)(நி)

### மலேரியா

இதனால் யாழ் குடாநாட்டில் மலேரியா நோய் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (இ,தி)

## மாணவர் சந்தை நாள்

(தென்மராட்சி)

யா-சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய பாடசாலை சந்தை நாள் இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி பொது சந்தையில் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது (86)

## விசேட கலந்துரையாடல்

'மதுவரித் திணைக்களம், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், வருமானவரித் திணைக்களம், நீர்வள சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், சீநோர் கூட்டுத்தாபனம், தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் யாழ் நாவலர் மண்டபத்தில் இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலக ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10-00 மணிக்கு வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

வங்கி ஊழியர்களுக்கும் மரக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் 11-30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்

சாவகச்சேரி கோட்ட பாடசாலைகள் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பகல் 1-00 மணிக்கு யாழ். ட்றிபேக் கல்லூரியியில் நடைபெறும்.

### சமாதான

தோல்வி அடைந்தால் உரிய மாற்றுத்திட்டம் ஒன்றின் பிரகாரம் தீர்வு காணப்படும் என்று ரத்வத்த தெரிவித்தார்.

ஆரம்பத்தில் சமாதான வழிகளில் முயற்சி எடுக்கிறோம். ஏதாவது ஒரு காரணத்தினால் அம் முயற்சி வெற்றி அளிக்காவிட்டால் முப்படைகளுக்கு போதிய பலத்தை வழங்கி அவர்களின் ஒத்துழைப்புடன் வெகு விரைவில் யுத்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்று தாங்கள் தெளிவாக உறுதியளித்ததாக அமைச்சர் பதிலளித்தார்;

யுத்த நடவடிக்கை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா எனநிருபர்வினாவியதற்கு. முப்படைகளுக்கு தேவையான சலுகைகளை வழங்கி புதிய கட்டளைகளை வழங்கினால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற பூரண நம்பிக்கை எமக்கு உண்டுஎன அமைச்சர் கூறினார்.

காமினி திசாநாயக்கா கொலை செய்யப்பட்டது தொடர்பாக நாடுமுழுவதிலும் பல்வேறு வதந்திகளும் கட்டுக்கதைகளும் பரவுகின்றன இது பற்றி உங்களின் கருத்து என்ன என அமைச்சரை கேட்டபோது,

பலர் பல்வேறு விதமான வதந்திகளை பரப்பக் கூடும் ஆனால் முறையான விசாரணைகளை நடத்தி தெளிவான முடிவு ஒன்றிற்கு வருவதற்கே அரசாங்கம் முயற்சி எடுக்கின்றது.

திருமதி காமினி திசாநாயக்காவின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன என கேட்டதற்கு,

அவரது பாதுகாப்பிற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 58 பேரும், கொமாண்டோ படையைச் சேர்ந்த16பேரும் ஈடுபடுத்தப் பட்டார்கள்- அன்றையதினம்

# இராணுவ முகாம்களின் முன் தாக்குதலற்ற பிரதேசம்!

## போர்நிறுத்தத்திற்கு ராணுவதரப்பு நிபந்தனை

(கொழும்பு)

யுத்தநிறுத்தமொன்று அமுலாக்கப்பட முன்னர் வடக்கு கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களின் முன்னணி நிலைகளின் முன் தாக்குதலற்ற பிரதேசம் அல்லது அமைதிப் பிரதேசம்என்று அறிவிக்கப்பட வேண்டும் என இராணுவ அதிகாரிகள் கேட்டுள்ளனர்

இதனை புலிகளுடனான பேச்சுக்களில் ஈடுபடும் அரசாங்க குழுவிடம் இராணுவத் தரப்பு அறியத் தந்திருப்பதாக சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது

இதன்படி குறிப்பிட்ட பிரதேசத்தினுள் எந்தவொரு ஆயுதம் தரித்தவர்களும் செல்ல அனுமதிக்கப்படக் கூடாது எனவும் இப்பிரதேசத்துள் படையினர் காவல் வளையமொன்றை அமைப்பதற்கோ தேடுதல் செய்யவோ அதிகாரம் வழங்கப்படவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது

இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் யுத்தநிறுத்தம் பற்றிக் கலந்துரையாடப்படும் போது இவ்விடயத்தை அரசாங்க தரப்பு குழு முன்வைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

### புலிகள்

களில் மாற்றம் எதுவும் இல்லை சமாதான முயற்சிகளையும் நாம் முற்றாக கைவிடவில்லை

விசாரணை முடிவு வரை பொறுப்புள்ள கட்சி என்ற வகையில் எவர்மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை

காமினி திசாநாயக்காவின் கொலை பல கோணங்களில் பார்க்கப்பட வேண்டியது விசேடமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல், கிரிமினல்களின் செல்வாக்கு என்பன கவனத்திற்கு எடுக்கப் படவேண்டியவை ஐ-தே-க-வின் தலைமை தொடர்பாக போட்டியினால் அக் கட்சி தன்னுள் முட்டிமோதிக் கொண்டிருக்கிறது இதனால் நேரடியாக ஒரு அணியின் மீது அல்லது ஒரு தனிநபர் மீது பழி சுமத்துவதுகூடாது

ஆனால் விசாரணைகளை எந்தக் கட்டத்திலும் தடுக்க அரசு முயலவில்லை விடுதலைப் புலிகளைப் பாதுகாக்க முயலவில்லை விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகிறது என இன்றும் நாம் நம்புகிறோம்

இதே வேளை காமினியின் கொலையை விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள் என்பது உறுதியானால் பேச்சுவார்த்தை தொடர்பாக மீண்டும் ஒருமுறை சிந்திக்கவேண்டும் என சிறிலங்கா பிரதமர் மேலும் தெரிவித்தார்-

### புலிகள் இன்றி

டிகளை போடுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

நிலைமையில் அமைதி ஏற்படும் வரை பேச்சுவார்த்தைகளை ஒத்திபோடுவதே பொறுப்புள்ள ஒரு அரசின் பணியெனவும் அவர் தெரிவித்தார்,

அரசியல் வன்முறையற்ற

## மட்டக்களப்பு சிறையில் 26 பேர் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் இருக்கும் இருபத்தியாறு இளைஞர்கள் மீண்டும் நாளை முதல் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தெரிய வந்துள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த போதும் சென்ற ஞாயிறு காலை இவர்களை சந்தித்த சிலர் வழங்கிய உறுதி மொழியைத் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு உண்ணாவிரதம் ஒத்தி வைக்கப்பட்டதாகவும் எனவே இதுவரை இதற்கான சாதகமான பதில் கிடைக்காமையினால் நாளை முதல் மீண்டும் இவர்கள் உண்ணாவிரதத்தில் குதிக்க இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

### புலிகள் சிறிபரக

படும் படகுகளை புலிகள் பரீட்சித்து வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக சண்டே லீடர் மேலும் தெரிவித்துள்ளது.

இதேபோல் பலாலி விமானப்படைத் தளத்தையும் தாக்க புலிகள் முயல்வதாகவும், பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து, அதிசக்தி வாய்ந்த குண்டுடன், புலிகளின் கரும்புலிப் படையினர் குதித்துத் தாக்கலாமென அச்சம் நிலவுவதாகவும் இவ்வாறு ஜப்பானின் கமிகாசி தற்கொலைப் படையினரும் தங்கள் எதிரணி நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதையும் அது மேலும்சுட்டிக்காட்டியுள்ளது

### கூரேக்கு

முன்னாள் வீடமைப்பு நகர நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்தார்.

எனக்கு கொலைப்பயமுறுத்தல்கள் வரவும் இல்லை. எனது பாதுகாப்பை பலப்படுத்தும்படி நான் கேட்கவும் இல்லை. அப்படி வந்த செய்திகளில் எந்த உண்மையும் இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

எனது பாதுகாப்பு தொடர்பாக ஏதோ கேள்விப்பட்ட அரசாங்கம் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. அதற்கான காரணத்தை அரசாங்கம் எனக்கு தெரிவிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### விடுதிகள்

ளைப் பதிவு செய்வதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் இவர்களின் வாக்குமூலங்களிலிருந்து இக்கொலை தொடர்பான தகவல்களை பெறும் நோக்குடனேயே இவர்கள் விசாரிக்கப்படுகின்றனர் என்றும் குற்றத்தடுப்பு பணியகத்தின் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரீண்டன் லயனல் குணதிலகா கூறினார்

## மரண அறிவித்தல்

### திரு. முருகேசு இராசலிங்கம்

உத்திராவத்தை புலோலி கிழக்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு முருகேசு இராசலிங்கம் 24-10-1994 இல் இந்தியாவில் காலமானார் இவர் காலஞ்சென்ற முருகேசு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும். பவளத்தின் அன்புக் கண


## தீபாவளி மலிவு விற்பனை

மலிவு விலையில்:

★ புடவை வகைகள்

★ பீங்கான் வகைகள்

றது.

இந் நிகழ்விற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பகுதி பொது முகாமையாளர் மு. உமைநேசன் (சஞ்சை) அவர்கள் தலைமை தாங்கினார்.

இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கை யாழ் மாவட்ட பதில் அரச அதிபர்

### மலேரியா

இதனால் யாழ் குடாநாட்டில் மலேரியா நோய் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (இ,தி)


# தீபாவளி
# மலிவு விற்பனை

மலிவு விலையில்:

★ புடவை வகைகள்
★ பீங்கான் வகைகள்

நியாய விலையில்:

பாவனைப் பொருட்கள்
பாதணி வகைகள்
அன்பளிப்பு பொருட்கள்

ரூ. 500/- ற்கு மேற்பட்ட கொள்வனவு மூலம் மாதாந்த பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம்

பரிசுகள்:-

ரூ. 2500/- ரூ. 1500/- ரூ. 1000/-

★ எழிலகம் ★

லெப். இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.

(சி-10592)


கூட்டுத்தாபனம், தொழில் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் யாழ் நாவலர் மண்டபத்தில் இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலக ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10-00 மணிக்கு வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

வங்கி ஊழியர்களுக்கும் மரக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் 11-30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்

சாவகச்சேரி கோட்ட பாடசாலைகள் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பகல் 1-00 மணிக்கு யாழ். ட்றிபேக் கல்லூரியியில் நடைபெறும்.

கொடிகாமம் கோட்டபாடசாலைகள் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வங்கி ஊழியர்கள், சாவகச்சேரி நகர சபை ஊழியர்கள். பிரதேச சபை ஊழியர்கள், மாவட்ட வைத்தியசாலை ஊழியர்கள், சுகாதார சேவை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரியில் நடைபெறும்.

அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

பல்வேறு வதந்திகளும் கட்டுக் கதைகளும் பரவுகின்றன இது பற்றி உங்களின் கருத்து என்ன என அமைச்சரை கேட்டபோது,

பலர் பல்வேறு விதமான வதந்திகளை பரப்பக் கூடும் ஆனால் முறையான விசாரணைகளை நடத்தி தெளிவான முடிவு ஒன்றிற்கு வருவதற்கே அரசாங்கம் முயற்சி எடுக்கின்றது.

திருமதி காமினி திசாநாயக்காவின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன என கேட்டதற்கு,

அவரது பாதுகாப்பிற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 58 பேரும், கொமாண்டோ படையைச் சேர்ந்த16பேரும் ஈடுபடுத்தப் பட்டார்கள்- அன்றையதினம் பெருமளவு பொலிசாரும் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்தார்கள் என அவர் தெரிவித்தார்-

தற்போது ஊரடங்குச் சட்டம் எதற்காக அமுல்படுத்தப் படுகின்றது எனக் கேட்டதற்கு

வதந்திகளின் காரணமாக பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படலாம்- குறிப்பாக இனக் கலவரங்கள் இடம்பெறக்கூடும் இதனால் நாட்டில் குழப்ப நிலை ஏற்படலாம்- 83ஆம் ஆண்டிலும் இத்தகைய சம்பவங்களே ஏற்பட்டன- அதற்கு பின்னரும் பல தடவைகள் இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டன- நாம் அதற்கு இடமளிக்க மாட்டோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

முயலவில்லை விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகிறது என இன்றும் நாம் நம்புகிறோம்

இதே வேளை காமினியின் கொலையை விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள் என்பது உறுதியானால் பேச்சுவார்த்தை தொடர்பாக மீண்டும் ஒருமுறை சிந்திக்கவேண்டும் என சிறிலங்கா பிரதமர் மேலும் தெரிவித்தார்-

### புலிகள் இன்றி

டிகளை போடுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

நிலைமையில் அமைதி ஏற்படும் வரை பேச்சுவார்த்தைகளை ஒத்திபோடுவதே பொறுப்புள்ள ஒரு அரசின் பணியெனவும் அவர் தெரிவித்தார்,

அரசியல் வன்முறையற்ற சமுதாயத்தைக் கட்டி எழுப்ப தமது அரசு முயற்சிகள் எடுத்தும் கூட வன்முறைகள் நிகழ்ந்து கொண்டிருப்பது குறித்து அவர் கவலை தெரிவித்தார். யு.என் பிக்கு ஓர் வன்முறைக் கலாசாரம் இருப்பதாகவும் யு.என்.பி கடந்த காலங்களில் அரசியல் ஆதாயத்திற்காக அரசியல் கொலைகளில் ஈடுபட்டது தெரிந்ததே என்றார் சந்திரிகா.

மேலும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்திக்தே எமது பிரதிநிதிகள் பேச்சுக்களை நடாத்தி வருகின்றனர். அவர்கள் இப்போழுது சமாதானத்தை ஏற்கத் தயாராக இருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

வும், பறக்கும் விமானம் ஒன்றிலிருந்து, அதிசக்தி வாய்ந்த குண்டுடன், புலிகளின் கரும்புலிப் படையினர் குதித்துத் தாக்கலாமென அச்சம் நிலவுவதாகவும் இவ்வாறு ஜப்பானின் கமிகாசி தற்கொலைப் படையினரும் தங்கள் எதிரணி நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதையும் அது மேலும்சுட்டிக்காட்டியுள்ளது

கப்பட்டுள்ளது என்றும் இவர்களின் வாக்குமூலங்களிலிருந்து இக்கொலை தொடர்பான தகவல்களை பெறும் நோக்குடனேயே இவர்கள் விசாரிக்கப்படுகின்றனர் என்றும் குற்றத்தடுப்பு பணியகத்தின் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிறீன்டன் லயனல் குணதிலகா கூறினார்


## மரண அறிவித்தல்
## திரு. முருகேசு இராசலிங்கம்

உத்திராவத்தை புலோலி கிழக்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு முருகேசு இராசலிங்கம் 24-10-1994 இல் இந்தியாவில் காலமானார் இவர் காலஞ்சென்ற முருகேசு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும். பவளத்தின் அன்புக் கணவரும். திருநாவுக்கரசு (கனடா) சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும். திருமதி ரதி (U.K), திருமதி ஜெயா பிரான்ஸ்), திருமதி எழில்மதி (ஜேர்மனி). திருமதி ஜெபந்தி (U K), மோகன் (U.K), சாந்தன் (U K) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு பாஸ்கரன், திரு. அம்பலவாணர், திரு. இராசன், திரு. சிறீமோகன் ஆகியோரின் மாமனாரும். திரு. தங்கராசா, திருமதி இரத்தினம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்,

தகவல்
திரு. பொ. தங்கராசா
மனைவி சிவபாக்கியம்

102, இராமநாதன் வீதி,
கலட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம். (9833)



மக்களின் மகிழ்ச்சிக்கு

# சேரனின்

சிறப்புச் செய்தி!!

# ∴ எழினி புடவை வாணிபம் ∴

வழங்கும் **மலிவு விற்பனை** தவறவிடாதீர்கள்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
விசேட கழிவுடனான (20% தொடக்கம் 50% வரை) மலிவு விற்பனை இன்று மட்டும் (28.10.94) நீடிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில்

சேரன் பணிமனை மண்டபம்

கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

(சி-10594)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.